# வழிவழி வள்ளுவர்

MADURAI UNIVERSITY LIBRARY.
MADURAI-625021.

ஆசிரியர் :
ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ.,பி.எல்.

பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை - 14 திருச்சி - 2 சேலம் - 1
கோயமுத்தூர் - 1 மதுரை - 1

முதற் பதிப்பு : 1953.
ஏழாம் பதிப்பு: 1970.

விலை : ரூ. 1-50

ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை-14

# முன்னுரை

தமிழ்நாட்டின் பண்பாட்டை உருப்படுத்திய இலக்கியங்களுள் தலைமை சான்றது திருக்குறள். முப்பாலாக விளங்கும் அந் நூலை எப்பாலவரும் ஏற்றுப் போற்றுவர். தொன்றுதொட்டு அதன் சொல்லையும் பொருளையும், தமிழ்ப் புலமை யுலகம் பொன்னேபோற் போற்றி வருகின்றது. சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, கம்பராமாயணம் ஆகிய நாற்பெருங் காப்பியங்களும், ‘பாட்டுக்கொரு புலவன்’ என்று பாராட்டப்பெறுகின்ற பாரதியார் இயற்றிய கவிதைகளும் திருக்குறளால் வளம் பெறும் முறையினைக் காட்டுதலே, **‘வழிவழி வள்ளுவர்’** என்னும் இந் நூலின் நோக்கமாகும். இவற்றுள் ‘கம்பராமாயணத்திலே வள்ளுவர்’ என்ற கட்டுரை, சென்னை வானொலியில் யான் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம். “பாரதியார் கவிதையிலே வள்ளுவர்” என்பது டாக்டர் R. K. சண்முகம் செட்டியாருடைய அறுபதாம் ஆண்டு நினைவு மலரில் யான் எழுதிய கட்டுரையின் பெருக்கம். இவற்றை நூலாக வெளியிடுவதற்கு அன்பு கூர்ந்து இசைவு தந்த சென்னைப் பல்கலைக் கழகத்தாருக்கும், ஒப்பு நோக்கி உதவிய அன்பர் திரு. M. A. துரையரங்கனார் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகும்.

சென்னை,
1—2—’53.

ரா. பி. சேதுப்பிள்ளை

MADURAI UNIVERSITY LIBRARY ★ MADURAI-625021 ★

## உள்ளுறை


1. சிலப்பதிகாரத்திலே வள்ளுவர் 1

2. மணிமேகலையிலே வள்ளுவர் 19

3. சிந்தாமணியிலே வள்ளுவர் 37

4. கம்பராமாயணத்திலே வள்ளுவர் 55

5. பாரதியார் கவிதையிலே வள்ளுவர் 77

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-625021.

# சிலப்பதிகாரத்திலே வள்ளுவர்

**சிலப்பதிகாரம்** தமிழ் நாட்டின் சிறந்த கலைச் செல்வம். அது முற்காலத் தமிழகத்தின் சீர்மையை விளக்கும்; முத்தமிழின் பெருமையை முழக்கும். இத்தகைய சிலம்புச் செல்வத்தை வழங்கிய செஞ்சொற் கவிஞர் இளங்கோ வடிகள். அவர் தவச் செல்வமும் தமிழ்ச் செல்வமும் ஒருங்கே பெற்றவர்; திருவள்ளுவர் அருளிய திருக்குறளைப் பொன்னேபோற் போற்றியவர்.

## காவிரி நாடு

சிலப்பதிகாரத்தின் கதாநாயகியாகிய கண்ணகி பிறந்த நாடு, புலவர் பாடும் புகழுடைய சோழ நாடு. வள்ளுவர் குறித்த வருபுனலும் இருபுனலும் உடையது அவ் வளநாடு. பால் நினைந்து ஊட்டும் தாய்போல் அந் நாட்டை நீரூட்டி வளர்த்தது காவேரி யாறு.[1] அவ் வாற்று நீரை அணைகளால் அணைத்து, கால்களால் எடுத்து, குளங்களில் நிறைத்து, வயல்களில் பாய்ச்சிச் செந்நெல் விளைத்தனர் மருத நில மக்கள்.

"பலகுடை நீழலும் தம்குடைக்கீழ் காண்பர்
அலகுடை நீழ லவர்"

என்று பயிர்த் தொழிலாளர் பெருமையைத் திருக்குறள் பாடிற்று. 'வேளாண்மையால் வறியவர் பசி நோய் ஒழியும்;

1. "வாழி அவன்தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி"
—சிலப்பதிகாரம்-கானல் வரிப்பாட்டு

வேந்தர் படைத்திறம் ஓங்கும்' என்று இக்குறளில் வள்ளுவர் உரைத்த வாய்மையை ஏற்றிப் போற்றுகின்றார் இளங்கோவடிகள்.

*"பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்*
*இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்*
*உழவிடை விளைப்போர்"*

என்ற சிலப்பதிகார அடிகளில் பயிர்த் தொழில் செய்யும் மக்களால் இரவலரும் புரவலரும் அடையும் நன்மையைப் பாராட்டுகின்றார் கவிஞர்.

வேளாண்மையோடு சான்றாண்மையும் செல்வச் செழுமையும் உடையதே நாடு என்று பாடினார் திருவள்ளுவர்.

*"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்*
*செல்வரும் சேர்வது நாடு"*

என்பது அவர் வாக்கு. கல்வி அறிவு ஒழுக்கங்களில் மிக்காரே தக்கார் எனப்படுவார். இத்தகைய மாந்தரை உடைய நாடு பெருமை சான்ற நாடு என்பது திருவள்ளுவர் கருத்து. இவ்வுண்மையை உணர்ந்தன்றோ "சான்றோர் பலர் யான் வாழும் ஊரே" என்று பெருமிதமுற்றுப் பேசினார், ஒரு தமிழ்ப் புலவர். பாரத நாட்டுப் பொதியமலையும், இமயமலையும், புகார் நகரும் ஆன்றோர் வாழுமிடமாதலால் அழியாத் தன்மை வாய்ந்தன என்று இளங்கோவடிகள் கூறுகின்றார்.[2]

---

2. *"பொதியி லாயினும் இமய மாயினும்*
*.............................*
*பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்*
*நடுக்கின் றி நிலைஇய என்ப் தல்லதை*
*ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையில்*
*முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே"-சிலப்.-மங்கல*
*[வாழ்த்து*

## வாணிக வளம்

இனி, வள்ளுவர் குறித்த 'தாழ்விலாச் செல்வம்' வாணிகத்தால் வரும் என்பது தமிழ் நாட்டார் கொள்கை. முன்னாளில் வாணிகத்தால் வளம் பெருக்கிய நகரங்கள் பல தமிழ் நாட்டில் இருந்தன. அவற்றுள்ளே தலை சிறந்தது காவிரிப்பூம்பட்டினம். காவிரியாறு கடலொடு கலக்கு மிடத்தில் அழகிய துறைமுக நகரமாக விளங்கிற்று அப் பட்டினம். கடல் வழியாகவும் தரை வழியாகவும் அந் நகரில் வந்து சேர்ந்த பொருள்களைப் பட்டினப்பாலை என்னும் பழந்தமிழ்ப் பாட்டிலே காணலாம்.[3] இத்தகைய சீர்மை வாய்ந்த பட்டினத்தை,

*"உரைசால் சிறப்பின் அரைசுவிழை திருவில்*
*பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்"*

என்று புகழ்ந்து பாடுகின்றார் இளங்கோவடிகள். கடல் கடந்து, பிற நாடுகளிற் போந்து, வாணிகம் செய்து வளம் பெருக்கிய பரதர் அந் நகரில் நிறைந்திருந்தனர். பட்டினக் கடற்கரையில் பிறநாட்டு வணிகர், மாட மாளிகை யமைத்துத் தமிழ் மக்களோடு கலந்து வாழ்ந்தனர்.

இத்தகைய வளமார்ந்த நகரில் கோவலன் தந்தை யாகிய மாசாத்துவானும் கண்ணகியின் தந்தையாகிய மாநாய்கனும் வணிக மன்னராய் விளங்கினர். வணிகர் குலத்திற்குரிய ஒழுக்க நெறியில் வழுவாது நின்று பொருள் ஈட்டினர் அவ் விருவரும்.

*"வாணிகம் செய்வார்க்கு வணிகம் பேணிப்*
*பிறவும் தமபோல் செயின்"*

3. பத்துப்பாட்டு, பட்டினப் பாலை : 185—192.

என்று வணிகர் குலத்திற் குரிய நெறியை விளக்கிப் போந்தார் வள்ளுவர். பிறர் பொருளைத் தம் பொருள் போல் பேணுதலே வாணிகத்திற்கு அழகு. பண்டமாற்றுச் செய்யும்பொழுது, மிகைபடக் கொள்வதும் குறைபடக் கொடுப்பதும் குற்றமாகும்.[4] இக் குற்றத்தின் நீங்கி வள்ளுவர் வகுத்த அறநெறியில், வாழ்ந்த பூம்புகார் வணிகரை, "குலத்திற் குன்றாக் கொழுங் குடிச் செல்வர்" என்று பாராட்டினர் இளங்கோவடிகள்.

## நகரச் சிறப்பு

சோழ நாட்டின் செழுமை யெல்லாம் அதன் தலை நகரத்திலே சிறந்து விளங்கிற்று. காவிரி நாட்டின் விளை பொருள்களும், கடல் வழியாக வந்த பல்வகைப் பொருள்களும் நிறைந்து,

"பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறைஒருங்கு நேர்வது நாடு"

என்னும் திருக்குறளுக்கு ஓர் எடுத்துக் காட்டாக நின்றது அந் நகரம். பல நாடுகள் பொறுத்த பார மெல்லாம் ஒருங்கே சேர்ந்து வந்தாலும் தளராது தாங்கும் தகுதி வாய்ந்த நாடே சிறந்த நாடு என்பது இக்குறளின் கருத்து. பகையரசரின் படையெடுப்பாலும், பஞ்சத்தின் கொடுமையாலும், அரசாட்சியின் அழிம்பினாலும் இன்னோரன்ன பிற காரணங்களாலும் ஒரு நாட்டு மக்கள் குடிபெயர்ந்து அயல் நாட்டில் சென்று சேர்வதுண்டு. அன்னாரையும் ஆதரிக்கும் வளமுடைய நாடே நன்னாடு என்பது வள்ளுவர் கருத்து. இக் கருத்தைத் தழுவி,

"முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி"

---

4. பத்துப்பாட்டு, பட்டினப்பாலை ; 202-210.

காவிரிப்பூம்பட்டினம் சிறந்து விளங்கிற்றென்று சிலம்பு பாடிற்று.

## இன்ப வாழ்க்கை

சிலப்பதிகாரத்தில் கதாநாயகியாகிய கண்ணகி, காவிரிப்பூம்பட்டினத்திலே பிறந்து வளர்ந்தாள். ஒத்த குலமும் நலமும் வாய்ந்த கோவலனை மணந்தாள். இடம் பொருள் ஏவல் என்னும் மூன்றும் குறைவறப் பெற்ற கோவலனும் கண்ணகியும் இன்புற்று வாழ்ந்தனர்.

*"கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்*
*ஒண்டொடி கண்ணே யுள"*

என்ற குறளின் கருத்தை உட்கொண்டு, "மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே, தேனே" என்று தன் காதல் மனையாளைப் பாராட்டினான் கோவலன்.[5]

இன்னும்,

*"குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்*
*மழலைச்சொல் கேளா தவர்"*

என்ற வள்ளுவர் வாக்கை உள்ளத்திற் கொண்டு அவள் பேச்சின் இனிமையைப் புகழலுற்றான்:

*"அளிய தாமே சிறுபசுங் கிளியே*
*குழலும் யாழும் அமிழ்தும் குழைத்தநின்*
*மழலைக் கிளவிக்கு வருந்தின"*

என்று அழகுற மொழிந்தான். "மாதே! கிளியின் மொழியே செவிக்கு இன்பம் என்பர். அக் கிளியும்

---

5. *இவற்றான் சொல்லியது ஒளியும் ஊறும் நாற்றமும் சுவையும் ஓசையும் ஆகலின், "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள" என நலம் பாராட்டப்பட்டன — சிலப்பதிகாரம்: 73—74, அடியார்க்கு நல்லார் உரை.*

உன்னைப்போல் பேசமாட்டாது வாயடங்கிற்றே! குழலின் ஒலியையும், யாழின் ஒலியையும் அமிழ்தின் சுவையொடு கூட்டிக் குழைத்தாற் போன்ற இனிமை வாய்ந்தது உன்னுடைய மழலை மொழி'' என்று புகழ்ந்தான் கோவலன். இப் புகழுரையில் திருக்குறளின் சொல்லும் பொருளும் அழகுற விளங்குகின்றன.

## மாலைப்பொழுது

இத் தகைய இன்ப வாழ்க்கைக்கு ஓர் இடையூறு நேர்ந்தது. பூம்புகார் நகரில் நிகழ்ந்த அரங்கேற்று விழாவில், இளமையும் அழகும் வாய்ந்த மாதவி யென்னும் பொதுமகள் நாட்டியமாடினாள். கோவலன் அந்த ஆடலைக் கண்டான்; பாடலைக் கேட்டான்; மாதவியின் அழகிலே மயங்கினான்; அன்றே தன் மனைவியை மறந்தான்; மாதவியின் மையலிலே தாழ்ந்தான்; அவளை மகிழ்விப்பதற்காக அளவிறந்த பொருளைச் செலவிட்டான். தன்னந்தனியளாய் இருந்து கவலையுற்றாள் கண்ணகி. நாள்தோறும் அந்தி மாலையில் ஆறாத் துயரடைந்தாள். காதல் என்னும் பூ காலையில் அரும்பும்; பொழுது செல்லச் செல்ல முதிர்ந்து போதாகும்; மாலையில் மலரும் என்று திருக்குறள் கூறுகின்றது.

> "காலை அரும்பி, பகலெல்லாம் போதாகி
> *மாலை மலரும்இந் நோய்''*

என்பது வள்ளுவர் வாய்மொழி. இத் தன்மை வாய்ந்த அந்திமாலை வந்த பொழுது கோவலனோடிருந்த மாதவி அடைந்த இன்பத்தையும், அவனைப் பிரிந்திருந்த கண்ணகி அடைந்த துன்பத்தையும் உணர்த்தப் போந்த இளங்கோவடிகள்,

*"கூடினார் பால்நிழலாய், கூடார்பால் வெய்யதாய்க்*
*காவலன் வெண்குடைபோல் காட்டிற்றே—கூடிய*
*மாதவிக்கும் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து*
*போதழ்விக்கும் கங்குற் பொழுது"*

என்று பாடினார். போதாக நிற்கும் பூக்கள் மாலைப் பொழுதில் மலரும் என்று திருவள்ளுவர் கூறிய கருத்தைத் தழுவி எழுந்தது இப் பாட்டு. வெண்ணிலாவின் ஒளி விரிந்து, போதாக நின்ற பூக்களின் கட்டவிழ்த்து இதழ் விரிக்கும் அந்திப் பொழுதில் மாதவி இன்பத்தில் திளைத்தாள்; கண்ணகி துன்பத்தில் ஆழ்ந்தாள் என்பது இதன் கருத்து.

## பழுதுற்ற மனையறம்

கோவலன் நெறி தவறி நடந்ததனால் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையும் இழந்து நின்றாள் கண்ணகி. ஆயினும், கணவனே தெய்வம் என்ற கொள்கையில் அவள் சிறிதும் தளர்ந்தாளில்லை; "கண்டார் வெறுப்பனவே காதலன்தான் செய்திடினும் கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்" என்று ஆன்றோர் அருளிய உண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்தாள். எனினும், இல்லறம் நடைபெறாது ஒழிந்ததே என்ற வருத்தம் அவள் உள்ளத்தை விட்டு அகலவில்லை.

*"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்*
*இல்வாழ்வான் என்பான் துணை"*

என்று வள்ளுவர் விதித்தவாறு அறவோரையும் துறவோரையும் வறியோரையும் ஆதரித்ததற்குரிய மனையறம் முட்டுப்பட்டதே என்று அவள் மயக்க முற்றாள்.

"அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

என்று கூறுமாற்றால் அவள் மனப்பான்மை விளங்கும்.

## கண்ணகியின் கண்ணீர்

இன்பத்துறையில் மூழ்கிய கோவலன் கைப் பொருளெல்லாம் இழந்தான். கண்ணகியின் அணிகலன்களும் ஒன்றன்பின் ஒன்றாய்ச் சென்றொழிந்தன. அவள் காலணியாகிய சிலம்பொன்றே எஞ்சி நின்றது. இந்த நிலையில் கோவலனுக்கும் மாதவிக்கும் பிணக்கம் உண்டாயிற்று; கடற்கரையில் மாதவி பாடிய கானல் வரிப்பாட்டு அவ்விருவரையும் பிரித்தது. 'மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள்' என்று மாதவியை வெறுத்து நீத்த கோவலன் மீண்டும் கண்ணகியிடம் போந்தான்; தன் சிறுமையை நினைந்து சிந்தை தளர்ந்தான்; வாழ்ந்து கெட்ட வளநகரில் இருப்பதற்கு நாணி, கண்ணகியுடன் மதுரைக்குப் புறப்பட்டான்; அந் நகரில் அவளுடைய சிலம்பை விற்றுப் பிழைப்பிற்கு வழி தேடக் கருதினான்; ஒற்றைச் சிலம்பை எடுத்துக்கொண்டு கடைத்தெருவிற் சென்றான். அங்கு அரண்மனைச் சிலம்பைக் களவாடிய கள்வன் என்று அடாப்பழி சுமத்தி, அரசன் ஆணையால் கோவலனைக் கொலை செய்தனர் காவலாளர். கணவனுக்கு நேர்ந்த கொடுமையை அறிந்தாள் கண்ணகி; மனந் துடித்தாள்; கண்ணீர் வடித்தாள்; அறம் எனக்கு இல்லையோ என்று அலறினாள்; தலைவிரி கோலமாக அரண்மனையை நோக்கி நடந்தாள்; செல்லும் வழியெல்லாம் கண்ணீர் சொரிந்தாள்.

*"அல்லற்பட்டு ஆற்ருது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"*

என்ருர் திருவள்ளுவர். ஏழையர் வடிக்கும் கண்ணீரால் விளையும் தீமையை அறிந்த மதுரை மாநகரத்தார் வீதியின் இரு மருங்கும் நின்று கண்ணகியைக் கண்டு கலங்கினர்கள். அவர்களைப் பார்த்து, "நிறையுடையப் பத்தினிப் பெண்டிர்காள்! கள்வனே அல்லன் என் கணவன்!" என்று கதறினள் கண்ணகி. அவள் கோலத்தைக் கண்டு குலுங்கிற்று மதுரை மாநகரம்.

*"அல்லல்உற்று ஆற்ருது அழுவாளைக் கண்டுஏங்கி
மல்லல் மதுரையார் எல்லாரும் தாம்மயங்கிக்
களையாத துன்பம்இக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது"*

என்று மதுரையார் வருந்தியதாகச் சிலம்பு பாடிற்று.

## வீரக் கற்பு

மதுரை மாநகரில் கோவலனைப் பறி கொடுத்த பொழுது கண்ணகியின் அறக் கற்பு மறக் கற்பாயிற்று. புகார்நகரில் பொறையிருந்து ஆற்றிய கண்ணகி மதுரை மன்னனது முறையிகந்த செயலைக் கண்டு சீறினள்; 'தீவேந்தன் தனைக்கண்டு இத்திறங் கேட்பேன்' என்று துணிந்தாள். அவள் வாய்மொழியில் கற்பென்னும் திண்மை புலனுகின்றது.

*"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்"*

என்ருர் திருவள்ளுவர். மன்னனைக் காணச் சென்ற கண்ணகி அத் திண்மைக்கு ஓர் எடுத்துக் காட்டாயினள்; அரண்மனை வாயிலைக் காத்து நின்ற சேவகனைக்

கண்டாள். சீற்றம் பொங்கி எழுந்தது. குற்ற மற்ற கோவலனைக் கொன்ற கொடுங்கோல் மன்னனின் சேவகன் அல்லனோ இவன் என்று அவள் மனம் கொதித்தாள்;

"அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே"

என்று வல்லோசை செறிந்த மொழிகளால் அவனை விளித்தாள்; அரசனைக் காண வேண்டும் என்று அறிவித்தாள். அனுமதி கிடைத்தவுடன் உள்ளே சென்று அரியாசனத்தில் கோப்பெருந்தேவியோடு அமர்ந்திருந்த மன்னன் முன்னே நின்றாள் கண்ணகி. அழுத கண்ணும், அவிழ்ந்த தலையும், மாசடைந்த மேனியும், மணிச் சிலம்பேந்திய கையும் உடையவளாய் நின்ற கண்ணகியைக் கண்ட பொழுது துணுக்கமுற்றான் காவலன்.

"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றான்"

எனும் சிலப்பதிகார அடிகளில் கற்பின் திண்மையைக் காணலாம். அப்போது அரசன் அவளை நோக்கி, "கண்ணீர் வடித்து நிற்கும் மாதே! நீ யார்?" என்று வினவினான். அதற்கு மாற்ற முரைக்கப் போந்த கண்ணகி, நெறிமுறை வழுவாத சோழ மன்னன் ஆண்ட புகார் நகரத்தில் பிறந்தவள் என்று தன்னை அறிவித்தாள்;

"வாயின் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே"

என்று பேசினாள்.

## இறையும் முறையும்

கண்ணகி குறித்த சோழ மன்னன் வள்ளுவர் கூறிய அரச நீதிக்கு ஒரு சான்ருக விளங்கினுன்.

"இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்"

என்பது வள்ளுவர் வாக்கு. 'மாநிலத்தையெல்லாம் மன்னன் காப்பான்; அம் மன்னனை நீதி காக்கும்' என்ருர் வள்ளுவர். 'நீதி செலுத்துங்கால் இன்னுன் இனியான் என்று பார்க்கலாகாது; குலத்தையும் நலத்தையும் கருதலாகாது; எல்லார்க்கும் நீதி ஒன்றே' என்ற நேர்மையான உணர்ச்சியோடு மன்னன் முறை செய்தல் வேண்டும்; அதுவே முட்டாமல் நீதி செலுத்தும் முறையாகும். இக்கருத்தை மனத்திற் கொண்டு தவறு செய்தவர் எவரே யாயினும் தயக்கமின்றித் தண்டம் விதித்தனர் தமிழ் வேந்தர். அன்னவருள் தலைசிறந்தவன் கண்ணகி எடுத்துரைத்த சோழ மன்னன். ஒரு பசுவின் கன்றைக் கொன்ற அரசிளங் குமரனைத் தானே கொன்று முறை செய்த அம் மன்னனை மாநிலம் வியந்து புகழ்ந்தது. அரச நீதிக்கு அவன் அருஞ்செயலே எடுத்துக் காட்டாயிற்று. கணவனை இழந்த கண்ணகி பாண்டி மன்னனிடம் வழக்குரைக்கச் சென்ருற் போலவே சோழ மன்னனிடம் முறையிடச் சென்றது கன்றை யிழந்த பசு. கண்ணீர் வடித்து நின்ற பசுவின் குறையறிந்து முறை செய்த காவலனைப் போல், கண்ணீர் உகுத்து ஒரு பெண்ணின் குறையறிந்து முறை செய்தல் பாண்டியன் கடமை என்று குறிப்பாக உணர்த்தினுள் கண்ணகி.

## கொலைத் தண்டனை

அத் தகைய செங்கோல் மன்னன் அரசு புரிந்த சோழ நாட்டில், மாசாத்துவானுக்கு மகனாய்ப் பிறந்து, ஊழ்வினைப் பயனாய் மதுரையிற் போந்து, சிலம்பு விற்கச் சென்றவிடத்தில் அரசன் ஆணையால் கொலையுண்டு இறந்த கோவலன் மனைவி என்று தன்னை அறிவித்தாள் கண்ணகி. அப்போது, கோவலனைக் கள்வன் என்றே கருதியிருந்தான் காவலன். கள்வனைக் சொல்லுதல் காவலன் கடமை என்று நீதி நூல் கூறுகின்றது.

*"கொலையிற் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்*
*களைகட் டதனொடு நேர்"*

என்றார் வள்ளுவர். நாட்டில் களவு செய்பவர், சூறையாடுபவர், கொலை புரிபவர் முதலியோர்க்குக் கொலைத் தண்டம் விதித்தல் அரசனுடைய கடமை என்று வள்ளுவர் கூறிய முறையில்,

*"கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று*
*வெள்வேற் கொற்றம் காண்"*

என்று கண்ணகியிடம் நீதிமுறையை எடுத்துரைத்தான் பாண்டியன். அம் மொழி கேட்ட கண்ணகியின் உள்ளம் கொதித்தது. கற்பென்னும் திண்மையால் மீண்டும் பேசலுற்றாள்: "நற்றிறம் படராக் கொற்கை வேந்தே! என் கணவன் கையில் இருந்தது களவாடிய சிலம்பன்று; அஃது என் சிலம்பு; அதனுள்ளே அமைந்த பரல் மாணிக்கம்" என்றாள்; உடனே அச் சிலம்பை எடுத்து வந்தான் அரசன். உணர்ச்சி வசப்பட்ட கண்ணகி அதை உடைத்தாள். உள்ளே யிருந்த மாணிக்கம் துள்ளி எழுந்து மன்னன் முன்னே விழுந்தது.

அதைக் கண்டு திடுக்கிட்டான் அரசன்; கோவலன் கள்வனல்லன்; அவனுயிரைக் கவர்ந்த தானே கள்வன் என்று உணர்ந்தான்.

*"யானோ அரசன் யானே கள்வன்*
*மன்பதை காக்கும் தென்புலங் காவல்*
*என்முதற் பிழைத்தது கெடுகஎன் ஆயுள்*

என்று மயங்கி விழுந்தான்; மாண்டான்.

**வினைப் பயன்**

அப்பொழுது அவனருகே யிருந்த கோப்பெருந் தேவி, நெஞ்சம் குலைந்து நடுங்கினாள்; கணவனையிழந்து கடுந் துயருற்ற கண்ணகிக்கு ஆறுதல் கூறும் வகை யறியாது அவள் அடிகளில் விழுந்து தொழுதாள். மன்னவன் தீவினையால் இறந்துபட்டான் என்று தெள்ளிதின் உணர்ந்தாள் கண்ணகி;

*"பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா*
*பிற்பகல் தாமே வரும்"*

என்ற வள்ளுவர் வாக்கின்படி கோவலனைக் கொன்ற தீமையே விரைந்து வந்து பாண்டியன் உயிரைக் கவர்ந்தது என்னும் உண்மையைக் கோப்பெருந் தேவியிடம் எடுத்துரைத்தாள்:

*"கோவேந்தன் தேவி! கொடுவினை யாட்டியேன்*
*யாவும் தெரியா இயல்பினேன் ஆயினும்*
*முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு*
*பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்"*

"பாண்டிமா தேவி! கேள்: பாவியேன் ஒன்று மறியாத பேதையே. ஆயினும் காலையில் ஒருவனுக்குக் கேடு செய்தவன் மாலையில் கேடுறுவான் என்பதை இன்று கண்கூடாகக் கண்டோம்" என்று கூறினாள். கற்பிற்

சிறந்த கோப்பெருந்தேவியும் கணவன் இறந்த துயரத்தால் உயிர் துறந்தாள்.

'நல்வினை செய்தவர் நன்மையடைவர்; தீவினை செய்தவர் தீமையுறுவர்' என்பது அறநூலோர் கொள்கை. தீவினையால் வரும் துன்பத்தைத் தெளிவுறக் கூறுவது திருக்குறள்.

"எனைப்பகை உற்றாரும் உய்வர், வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்"

என்பது வள்ளுவர் வாக்கு. இவ் வாக்கை ஆதரித்து, "ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்றார் இளங்கோவடிகள். காவலன் தவறிழைத்ததும், கோவலன் கொலையுண்டதும் கண்ணகி துயருழந்ததும் வினைப் பகையால் நிகழ்ந்தன என்று சிலப்பதிகாரத்தில் விளக்கப்படுகின்றது.

"தொல்லை வினையால் துயர்உழந்தாள் கண்ணின்நீர்
கொல்ல உயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ"

என்று வல்வினையால் துன்புற்ற நல்லரசனை வாழ்த்தினார் இளங்கோவடிகள்.

## கற்பின் பெருமை

வீர மாபத்தினியாகிய கண்ணகி மதுரையை விட்டு நீங்கி, மேற்றிசை நோக்கிச் சென்று மலைநாட்டை அடைந்தாள்; அங்குள்ள திருச்செங்குன்று என்னும் மலையேறி ஒரு வேங்கை மரத்தின் நிழலில் நின்றாள். அப்பொழுது வான ஊர்தி ஒன்று அவ்விடத்தை நோக்கி வந்தது; அவளை ஏற்றிக்கொண்டு விண்ணுலகம் சென்றது. வானவர் மலர்மாரி பெய்தனர்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற வள்ளுவர் வாய்மொழியை நினைத்து இளங்கோவடிகள் கற்பின் செல்வியைப் போற்றுகின்றார்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுவாளைத்
தெய்வம் தொழுந்தகைமை திண்ணிதால்—தெய்வமாய்
மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து"

என்பது அவர் திருவாக்கு.

## மான வீரம்

மலை நாடடைந்து தெய்வீகமுற்ற கண்ணகியின் வரலாற்றை அறிந்தான் சேரநாட்டு அரசனாகிய செங்குட்டுவன்; தன் நாட்டில் அவ் வீர மாபத்தினிக்குக் கோவில் அமைத்து விழா வெடுக்க விரும்பினான்; இமய மலையில் சிலையெடுத்து, கங்கையாற்றில் நீராட்டி, வஞ்சி மாநகரில் கண்ணகியின் திருவுருவை நிறுவ ஆசைப் பட்டான். அதற்காக வடநாட்டிற்குச் செல்லுமுன்னே ஒரு செய்தி சேரன் செவிக்கு எட்டியது. கனகன், விசயன் என்னும் சிற்றரசர் இருவர் வடநாட்டரசர் பலர் குழுமியிருந்த சபையில் தமிழ் நாட்டரசருடைய வீரத்தைப் பழித்துரைத்தனர் என்று கேள்வியுற்ற சேரன் கடுஞ்சீற்றங் கொண்டான். மான வீரம் அவன் மனத்தில் முறுகி எழுந்தது.

"யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகப்பர் சொல்இழுக்குப் பட்டு" [6]

---

[6] "ஆக்கப் படுக்கும், அருந்தளைவாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும், புலைநரகத் துய்ப்பிக்கும்
காக்கப் படுவன இந்திரியம் ஐந்தினும்
நாக்கல்ல தில்லை நனிவெல்லு மாறே" என்பது
—வளையாபதி

என்ற வள்ளுவர் வாக்கின் உண்மையை அச் சிற்றரசர்க்கு உணர்த்த முற்பட்டான்; வாய் வீச்சிலே சிறந்த இருவரையும் வாள் வீச்சால் வென்று அடக்க விழைந்தான். தமிழ்ப்படை திரண்டு எழுந்தது. அதன் தலைவனாக வஞ்சிமாலை சூடிச் சென்றான் வீரன் செங்குட்டுவன். அப் படையெடுப்பின் நோக்கத்தை அவன் வாய்மொழியால் விளக்குகின்றது சிலப்பதிகாரம்.

"காவா நாவின் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடும் கூடி
அருந்தமி ழாற்றல் அறிந்திலர் ஆங்கெனக்
கூற்றங் கொண்டுஇச் சேனை செல்வது"

என்று கூறினான் சேர மன்னன்.

வடநாட்டில் தமிழ்ச் சேனைக்கும் வடவர் சேனைக்கும் போர் நிகழ்ந்தது. அப் போரில் எளிதாக வெற்றி பெற்றது தமிழ்ச் சேனை. வாய்வீரம் பேசிய கனகனும் விசயனும் சேரன் கையில் சிக்கிக்கொண்டனர். கண்ணகியின் திருவுருவம் செய்வதற்காக இமயமலையில் எடுத்த கல்லை, அவ்விருவர் தலையிலும் ஏற்றினான் தமிழ் வேந்தன். வஞ்சிமாநகர் வரையும் அதைச் சுமந்து வந்தனர் வடவாரியர். இங்ஙனம் தலையாலே சிலை சுமந்து அன்னார் இழுக்குற்ற செய்தியை வள்ளுவர் வாக்கைத் தழுவிச் சிலப்பதிகாரம் விரித்துரைக்கின்றது.

## அறவுரை

சேரன் செங்குட்டுவன் தமிழ்நாட்டுப் பெருவீரன்; பல போர்க்களங்களில் வெற்றிமாலை சூடிப் புகழ் பெற்றவன். பதிற்றுப் பத்து முதலிய பழந்தமிழ் நூல்கள் அவன் சிறப்பினை விரித்துக் கூறும். இத்தகைய மறப்போர் மன்னனுக்கு அறிவுரை கூற ஆசைப்

பட்டான் மாடலன் என்னும் அறவோன்.

இவ்வுலகில் நிலையற்ற பொருள்களை நிலையாகக் கருதலாகாது என்ற கருத்தை,

“நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை”

என்று கூறினார் வள்ளுவர். இக்குறளில் ‘நில்லாதவை’ என்று வள்ளுவர் சொல்லிய பொருள்கள் எவை என்ற வினாவிற்கு விடை தருகின்றது சிலப்பதிகாரம். யாக்கை நில்லாது; செல்வம் நில்லாது; இளமை நில்லாது என்று மாடலன் வாயிலாகக் கூறுகின்றார் இளங்கோவடிகள்; சேர மன்னனை நோக்கி.

“வையம் காவல் பூண்டநின் நல்யாண்டு
ஐயைந் திரட்டி சென்றதன் பின்னும்
அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை”

என்று செவியறிவுறுத்தத் தொடங்கினான் மாடலன், “அரசே! பெருமை சான்ற உன் குலத்தில் பிறந்து, செயற்கரிய செய்த வீரருள் எவரேனும் இன்று வாழ்கின்றனரா? அரும் புகழ்பெற்ற அம் மன்னர் அனைவரும் இவ்வுலகை விட்டு அகன்றனரே! அதனால் யாக்கை நில்லாது என்பதை உணர்ந்தா யல்லையோ? செல்வம் நில்லாது என்பதை உன்னோடு போர் புரிந்து தோல்வியுற்ற கனக விசயர் வாழ்க்கை காட்டுகின்றதன்றோ?

‘செல்வம் நில்லா தென்பதை வெல்போர்த்
தண்டமிழ் இகழ்ந்த ஆரிய மன்னரில்
கண்டனை அல்லையோ காவல் வேந்தே”

இளமை நில்லாது என்பதற்கு வேறு சான்றும் வேண்டுமோ? மன்னர் மன்னனாகிய நீயும் முதுமை

யுற்றுயே! யாக்கையும் செல்வமும் இளமையும் நிலையற்ற இவ்வுலகில் அழியாத பொருள் அறம் ஒன்றே'' என்று அறிவுரை பகர்ந்தான். மேலும்,

''அன்றறிவாம் என்னது அறம்செய்க, மற்றது
பொன்றுங்கால் பொன்றுத் துணை''

என்ற வள்ளுவர் வாய்மொழியை மாடலன் வாயிலாக விளக்கலுற்றார் இளங்கோவடிகள். அழியாத் தன்மை வாய்ந்த அறத்தினை இன்றே செய்தல் வேண்டும். நாளைச் செய்வோம் என்றிருத்தல் ஆகாது. ஏனெனில்,

''நாளைச் செய்குவம் அறம்எனில் இன்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்
இதுவென வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகில் முழுவதும் இல்லை''

என்று சிலப்பதிகாரம் விளக்குகின்றது.

கற்பின் செல்வியாகிய கண்ணகியின் கதையை ஒரு முத்தமிழ்க் காப்பியமாக உருப்படுத்திய இளங்கோவடிகள் மூன்று சிறந்த உண்மைகளை அதன் வாயிலாக உணர்த்திப் போந்தார். நீதிநெறி தவறிய அரசரை அறமே ஒறுக்கும் என்பதும், மாசிலாக் கற்புடைய மாதரை மண்ணும் விண்ணும் வணங்கும் என்பதும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும், சிலப்பதிகாரத்தில் உணர்த்தப்படுகின்றன. இம் மூன்றையும் 'முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோற் போற்றும்' தமிழிலக்கிய மரபைத் தழுவி, வள்ளுவர் வாய்மொழியை விளக்கியருளினார் இளங்கோவடிகள்:

# மணிமேகலையிலே வள்ளுவர்

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காவியங்கள் என்பர். சிலம்பை இசைத்த இளங்கோவடிகளும், மணிமேகலையை இயற்றிய சாத்தனரும் சிறந்த நண்பர்கள். அடிகளைப் போலவே சாத்தனரும் திருக்குறளில் ஈடுபட்டவர்; அதன் ஆசிரியரைப் 'பொய்யில் புலவன்' என்றும், அவர் வாய்மொழியைப் 'பொருளுரை" என்றும் போற்றியவர்.

## பொது மாதரும் குல மாதரும்

மாதவியின் மகளாகிய மணிமேகலை இளமையிலேயே துறவறத்தை மேற்கொண்டாள். அருள் நெறியில் நின்ற அம் மங்கையைப் பொருள் நெறியிற் சேர்க்க விரும்பினள் அவள் பாட்டியாகிய சித்திராபதி; இன்பத் துறையில் இழுக்க முயன்றான் உதயகுமரன் என்னும் அரசிளங்குமரன். பொது மாதர் குலத்தைச் சேர்ந்த மணிமேகலை, ஆடலும் பாடலும் அழகும் காட்டி, ஆடவர் உள்ளங் கவர்ந்து பொருள் சேர்க்கும் தொழிலை விட்டு, மாதவர் சங்கத்தைச் சேர்ந்து துறவு பூண்டது மதியீனம் என்று கருதினாள் சித்திராபதி.

பொது மாதரைப் பரத்தையர் என்றும், விலைமாதர் என்றும் கூறுவதுண்டு. அவரைப் 'பொருட் பெண்டிர்' என்றார் திருவள்ளுவர்.[1] பொருளையே குறிக்கோளாகக் கொண்டவர் என்பது அச்சொல்லின் பொருள். அவருடைய தொழிலை மணிமேகலை விளக்கிக் கூறுகின்றது :

---

1. *திருக்குறள், 913.*

"ஆடவர் காண நல்லரங் கேறி
ஆடலும் பாடலும் அழகும் காட்டி
..................................................
கண்டோர் நெஞ்சம் கொண்டகம் புக்குப்
பண்தேர் மொழியில் பயன்பல வாங்கி
வண்டின் துறக்கும் கொண்டி மகளிர்"

என்பது மணிமேகலை. இன்பத்துறையில் எளியராகிய செல்வரிடம் உள்ள பொருளைக் கொள்ளையிடும் மாதரைக் 'கொண்டி மகளிர்' என்றார் மணிமேகலையாசிரியர். இம் மகளிர் வண்டு போன்றவர். வண்டு, தேனுள்ள பூவை நாடிச் செல்லும்; அப் பூவில் அமர்ந்து தேனை முற்றும் பருகும். பின்பு அதை விட்டுத் தேனுள்ள மற்றொரு மலரில் சென்று சேரும். இது போன்றதே பொருட் பெண்டிரின் இயற்கையும்.

"நறுந்தா துண்டு நயனில் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்"

என்று சித்திராபதியின் வாயிலாக இப் பொது மாதரின் இயற்கையைக் கூறுகின்றது மணிமேகலை.

இவ்வாறு பொருட்பெண்டிரின் தன்மையை உதய குமரனிடம் எடுத்துரைத்த சித்திராபதி, குல மாதர் ஒழுக்கத்திற்கும் பொது மாதர் பழக்கத்திற்கும் உள்ள வேறுபாட்டையும் விளக்கினாள். 'சிறை காக்கும் காப்பு'[3] என்று வள்ளுவர் கூறியவாறு கட்டும் காவலும் உடையவர் குலமாதர்.

"கன்னிக் காவலும் கடியிற் காவலும்
தன்னுறு கணவன் சாவுறில் காவலும்
நிறையிற் காத்துப் பிறர்பிறர்க் காணாது
கொண்டோன் அல்லது தெய்வம் பேணாப்
பெண்டிர்"

---

2. மணிமேகலை, பா. 161, மூன்றாம் பதிப்பு.
3. திருக்குறள், 57.

என்று குலமாதரைப் புகழ்ந்தாள் சித்திராபதி. குல மாதருக்குக் கன்னிப் பருவத்திலும் காவல்; கணவனோடு வாழுங்காலத்திலும் காவல்; அவன் இறந்த பின்னரும் காவல். இத்தகைய குலமாதர், கொண்ட கணவனையே தெய்வமாகக் கருதுவர்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்றார் வள்ளுவர். கணவனே தெய்வம் எனக்கொண்ட கற்புடைய மாதர் 'பெய்' என்றால் மழை பெய்யும் என்று திட்டமாகக் கூறினார் திருவள்ளுவர். இது புனைந்துரையோ என்று எவரும் ஐயுறலாகாது எனக் கருதி,

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"

என்று அறிவுறுத்துகின்றது மணிமேகலை. திருவள்ளுவர் பொய்யில் புலவர்; அவர் அருளிய நல்லுரை புனைந்துரை யன்று, பொருளுரையே என்று மணிமேகலையாசிரியர் கூறுகின்றார்.

## வான் தரு கற்பு

மாசிலாக் கற்புடைய மாதரை 'வான் தரு கற்பினர்' என்று மணிமேகலை சிறப்பிக்கிறது. மழை பொழியச் செய்யும் கற்பே 'வான் தரு கற்பு' எனப்படும். இத்தகைய கற்பு வாய்ந்த ஒரு பெண்மணியின் பெருமையை மணிமேகலை எடுத்துரைக்கின்றது. காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த ஆதிரை என்னும் மங்கை அவ்வூர் வணிகன் ஒருவனை மணந்து இல்லறம் நடத்தினாள். அவ் வணிகன் ஒரு பொதுமாதின் மையலிலே தாழ்ந்து பொருளை யெல்லாம் இழந்தான். வறுமை யுற்ற நிலையில்

மீண்டும் வாணிகம் செய்ய விரும்பிக் கப்பலேறிச் சென்றான். அக் கப்பல் கடுங்காற்றில் அகப்பட்டுக் கவிழ்ந்தது. அச்செய்தியை அறிந்தாள் ஆதிரை; கணவன் இறந்த பின் உயிர்வாழ ஒருப்படாது இறக்கத் துணிந்தாள்; முதுகாட்டில் நெருப்பை மூட்டி அதனுள்ளே இறங்கினாள். அவளைச் சூழ்ந்து எழுந்த நெருப்பு சுடாது நின்றது. அது கண்ட ஆதிரை, 'தீயும் கொல்லாத் தீவினையேன் இனி என்ன செய்வேன்' என்று வருந்தி அழுதாள். அப்போது, ஆகாயவாணி, "மாதே! உன் கணவன் இறக்கவில்லை. நாகர் மலையில் இருக்கின்றான். இன்னும் சில காலத்தில் இங்கு வந்து சேர்வான்" என்று கூறிற்று. அது கேட்ட ஆதிரை துயரம் தீர்ந்து பொறுமையுடன் இருந்து கணவனைக் கண்டு இன்புற்றாள். இம் மாதின் சீர்மையை,

*"குளன்அணி தாமரைக் கொழுமலர் நாப்பண்*
*ஒருதனி ஓங்கிய திருமலர் போன்று*
*வான்தரு கற்பின் மனையுறை மகளிர்*
*தான்தனி ஓங்கிய தகைமையள் அன்றே*
*ஆதிரை நல்லாள்"*

என்று மணிமேகலை புகழ்ந்து போற்றுகிறது. கற்பினுக்கு ஓர் அணியாய்த் திகழ்ந்த ஆதிரை 'வான் தரு கற்பு' வாய்ந்த மாதருள் தலை சிறந்து விளங்கினாள்.

ஆதிரையைப் போன்று கற்புடைய மாதர், கொண்ட கணவன் மனத்துள் உறைவரேயன்றிக் கண்டவர் உள்ளத்திற் சென்று சேரமாட்டார் என்று சாத்தனார் கூறிப் போந்தார்.

*"மண்திணி ஞாலத்து மழைவளம் தரூஉம்*
*பெண்டி ராயின் பிறர்நெஞ்சு புகாஅர்"*

என்பது மணிமேகலை. வீட்டை விட்டு வெளியே செல்லும் குல மாதருடைய நடையும் உடையும் ஆடவர் கண்ணையும் கருத்தையும் கவரும் தன்மை வாய்ந்தனவாய் இருத்தலாகாது என்பது ஆன்றோர் கொள்கை. 'தீதிலா வடமீன்' என்று புகழப்படும் அருந்ததி போன்ற மாதர், நெஞ்சு புகாப் பெருமை வாய்ந்தவர் என்று தமிழ்க் கவிதை கூறும்.[4]

## மாதர் கற்பும் மன்னன் கடமையும்

இத்துணைப் பெருமை வாய்ந்த கற்பு நெறியைக் குறிக்கொண்டு காத்தல் மன்னவன் கடமை என்று மணிமேகலை வற்புறுத்துகின்றது. காவிரிப்பூம் பட்டினத்தில் அரசு புரிந்த நெடுமுடிக் கிள்ளியின் மைந்தனாகிய உதயகுமரன், தவநெறியில் நின்ற மணிமேகலையைக் காதலித்தான்; பூந்தோட்டத்திற்கு அம் மங்கை மலர் பறிக்கச் சென்ற போது அவளைப் பின் தொடர்ந்தான். அங்கிருந்த தெய்வம், "தவத்திறம் பூண்டோள் தன்மேல் வைத்த அவத்திறம் ஒழிக" என்று ஆணையிட்டது. அதனையும் பொருட்படுத்தாது, தீய நெறியில் முனைந்து நின்ற உதயகுமரன் ஒரு விஞ்சையன் வாளால் வெட்டுண்டு விழுந்தான். அச் செய்தியை அறிந்தான் அரசன். அவன் நீதி தவறாதவன்; திருவள்ளுவர் அறிவுறுத்திய வண்ணம் அரச நீதியை முட்டாமற் செலுத்தும் மனத்திட்பம் வாய்ந்தவன்; தவ நெறியில் வாழ்ந்த மணிமேகலைக்குத் தவறு செய்யக்

4. சிலப்பதிகாரத்தில் உள்ள 'தீதிலா வடமீன்' என்ற தொடருக்கு, 'தீது ஆவது பிறர்நெஞ்சு புகுதல்' என்று மணிமேகலையைப் பின்பற்றிப் பொருள் கூறினர் அடியார்க்கு நல்லார்.

கருதிய மைந்தன் இறந்தொழிந்தது தக்கதே என்று எண்ணினான். ஆயினும், ஒரு குறையை நினைத்து வருந்தியது அவன் உள்ளம். குற்றம் செய்தவனைத் தன் கையால் ஒறுத்து, நீதியின் நீர்மையை உலகறியக் காட்ட இயலாமற் போயிற்றே என்று அவன் ஏங்கினான்.

*"யான்செயற் பாலது இளங்கோன் தன்னைத்*
*தான்செய் ததனால் தகவிலன் விஞ்சையன்"*

என்று கூறினான்; 'ஒரு பசுவிற்குத் தவறிழைத்த மைந்தனைத் தானே கொன்று முறை செய்த மன்னனைப் போல் மாதவ மங்கைக்குத் தவறிழைத்த உதயகுமரனை நானே கொன்று நீதி செலுத்த இயலாமற் போயிற்றே' என்று அமைச்சரிடம் அங்கலாய்த்தான்.

*"மாதவர் நோன்பும் மடவார் கற்பும்*
*காவலன் காவல் இன்றெனின் இன்றும்*
*மகனை முறைசெய்த மன்னவன் வழிஓர்*
*துயர்வினை யாளன் தோன்றினன் என்பது*
*வேந்தர் தம்செவி உறுவதன் முன்னம்*
*ஈங்கிவன் தன்னையும் ஈமத்து ஏற்றுக"*

எனப் பணித்தான்.

## மன்னனும் மழையும்

அரசாட்சி, நீதி தவறாது நடைபெறுமாயின் நாட்டில் மழை குன்றாது என்றும், அது முறை தவறி நடக்குமாயின் மழை பெய்யாது என்றும் திருக்குறள் கூறுகின்றது.

*"முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி*
*ஒல்லாது வானம் பெயல்"*

என்றார் திருவள்ளுவர். பருவத்தில் மழை பெய்யா தொழிந்தால் பயிர்த்தொழில் நடவாது; பசியின் கொடுமை மக்களை வாட்டி வருத்தும். இதனாலேயே

"வான் நோக்கி வாழும் உலகெல்லாம்" என்ற வள்ளுவர் வாய்மொழி எழுந்தது. இவ்வுண்மையை,

*"கோன்நிலை திரிந்திடில் கோள்நிலை திரியும்*
*கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்*
*மாரிவறங் கூரின் மன்னுயிர் இல்லை"*

என்று கூறுகின்றது மணிமேகலை.

## பசியென்னும் தீப்பிணி

நாட்டில் வாழும் உயிர்களை வாட்டி வருத்தும் தீமைகள் மூன்று. அவை, பசியும் பிணியும் பகையும் ஆகும்.

*"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேராது இயல்வது நாடு"*

என்று பாடினார் திருவள்ளுவர். பசியினால், பிணி பெருகும்; பகை வளரும். இவ்வாறு தீமைகள் பலவும் பசியால் விளைதலால் அதனைத் 'தீப்பிணி' என்றார் திருவள்ளுவர்.[5] அப் பிணியால் மாந்தருடைய நலங்கள் எல்லாம் அழிந்து ஒழியும். இத் தன்மை வாய்ந்த தீப் பிணியைத் தீர்த்தல் தலையாய அறம் என்று திருக்குறள் கூறுகின்றது.

*"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்*
*பெற்றான் பொருள்வைப் புழி"*

என்பது வள்ளுவர் வாக்கு. இக் குறளில் அமைந்த 'அழிபசி' என்ற சொல்லின் கருத்தை விரித்துரைக்கின்றது மணிமேகலை.

*"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்*
*பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்"*

5. *பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்*
*தீப்பிணி தீண்டல் அரிது—திருக்குறள் : 227.*

நாண்அணி களையும் மாண்எழில் சிதைக்கும்

........................................................................

பசிப்பிணி என்னும் பாவி''

என்ற மணிமேகலை அடிகளால், பசியினால் விளையும் தீமை புலனாகும். பசிநோய், குல நலத்தை அழிக்கும்; மேன்மையைக் கெடுக்கும்; அறிவினைக் கொல்லும்; மானத்தை மாய்க்கும்; அழகினைச் சிதைக்கும் என்று விரித்துரைத்த மணிமேகலையைத் தழுவியே 'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்ற பிற்காலப் பாட்டு எழுந்தது.[6]

இத்தகைய பசிநோயை மாற்றும் அறப்பணி மணிமேகலையிலே போற்றப்படுகின்றது.

''மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே''

என்பது மணிமேகலை. ஆபுத்திரன் என்னும் அறவோனும் மணிமேகலையாகிய கதாநாயகியும் அமுதசுரபி என்ற திருவோட்டைக் கையில் ஏந்திப் பசித்தோர்க் கெல்லாம் உணவளித்தனர்; அறம் வளர்த்தனர்.

அன்பும் அருளும் வாய்ந்தவன் ஆபுத்திரன்; மன்னுயிரை யெல்லாம் தன்னுயிர்போல் கருதிய நல்லான்; அறங்களுள், ''ஒன்றாக நல்லது கொல்லாமை'' என்பதை உணர்ந்த உரவோன்.

## புலை சூழ் வேள்வி

முன்னாளில் வேள்வியின் பெயரால் பாரத நாட்டில் உயிர்க்கொலை நிகழ்ந்தது. பசுக்களையும் பிற

6. ''மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம்உயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்'' —வாக்குண்டாம்

உயிர்களையும் பலியிட்டு வேள்விகள் செய்யப்பட்டன. இக் கொடுமையைத் தடுக்க முயன்றனர் சான்றோர்.

*"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத்து உண்ணாமை நன்று"*

என்று அறிவுறுத்தினார் திருவள்ளுவர். வட நாட்டில் புத்தரும் இப் 'புலை சூழ் வேள்வி'யைத் தடை செய்தார். 'ஒரு நாள் பிச்சை எடுப்பதற்காக இராச கிருக நகரத்தையடைந்த கௌதமர், அந் நகரத்து அரசனாகிய பிம்பசாரன் பல பசுக்களைப் படுத்து யாகம் செய்கின்றான் என்பதைக் கேள்வியுற்று, மிக்க பரபரப்புடன் அந்த யாக சாலைக்குச் சென்று, கொல்லாமையாகிய நல்லறத்தின் பெருமையை விரித்துக் கூறி, அவ் வேள்வியில் நிகழும் கொலையை மாற்றினார்!" என்பது அவர் வரலாற்றில் கண்ட செய்தி.[7]

புத்தரைப் போலவே 'புலை சூழ் வேள்வி'யைத் தடுத்தான் ஆபுத்திரன். அவன் வரலாற்றை மணிமேகலை விரித்துரைக்கின்றது. ஓர் அந்தணன் வீட்டு யாக சாலையில் பசு ஒன்று கட்டப்பட்டிருந்தது. வேடர் வலையிற்பட்ட மான்போல், அது நடுங்கிக் கண்ணீர் வடித்தது. அதன் உயிரைக் காப்பாற்றக் கருதினான் ஆபுத்திரன். நள்ளிரவில், எல்லோரும் கண்ணுறங்கும் வேளை பார்த்து, அப் பசுவின் கட்டவிழ்த்து, வெளியே ஓட்டிச் சென்றான். காட்டு வழியிலே அதைக் கண்டு கொண்ட அந்தணர், ஆபுத்திரனைக் கள்வன் என்று கருதிக் கழியால் அடித்தனர். அது கண்ட பசு, சீற்ற முற்று ஆபுத்திரனைத் துன்புறுத்திய ஓர் அந்தணன் மீது

7. புத்த சரித்திரம், டாக்டர் உ.வே. சாமிநாதையர். மணிமேகலை பா, 17. மூன்றாம் பதிப்பு.

பாய்ந்து, கொம்புகளால் அவன் வயிற்றைக் கிழித்தெறிந்து காட்டிற்குள் ஓடிவிட்டது. அப்போது, இரக்கமற்ற அம்மாந்தரை நோக்கி, 'இப் பசு உங்களுக்கு என்ன தீங்கு செய்தது? காட்டிலுள்ள புல்லை மேய்ந்து கருணையோடு பாலைச் சுரந்தளிக்கும் பசுவினிடம் பகைமை கொள்வது முறையோ?

"விடுநில மருங்கில் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சொடு அருள்சுரந் தூட்டும்
இதனொடு வந்த செற்றம் என்னை"

என்று வினவினான் ஆபுத்திரன். இவ்வாறு வேத வேள்வியைப் பழித்த குற்றத்திற்காக அவனை ஊரினின்றும் விரட்டியடித்தனர். அதனால் வேறு புகலிடமின்றித் தென்மதுரையை அடைந்து, அம்பலத்தை இருப்பிடமாகக் கொண்டு பிச்சையேற்றுப் பிழைத்தான் அவ்வறவோன்.

## ஈத்துவக்கும் இன்பம்

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்ற வள்ளுவர் வாக்கின் வழி நின்று, பிச்சைச் சோற்றை அற்றார்க்கும் அலந்தார்க்கும் கொடுத்து மிச்சத்தைத் தானுண்டு வாழ்ந்தான் ஆபுத்திரன்;

"காணார், கேளார், கால்முடப் பட்டோர்
பேணுநர் இல்லோர், பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகஎன்று இசைத்துடன் ஊட்டி"

அம்பலத்திற் கண்ணுறங்கினான்; அவனுடைய சீலங் கண்டு அருள் கூர்ந்த சிந்தாதேவி என்னும் தெய்வம்

பிச்சைப் பாத்திர மொன்றை அவன் கையிற் கொடுத்து, "நாடெல்லாம் வறுமையுற்றாலும் இவ்வோடு வறுமை அடையாது; கொடுக்கக் கொடுக்க இதிலுள்ள உணவு வளர்ந்துகொண்டே இருக்கும்" என்று கூறி மறைந்தது. அமுத சுரபி என்னும் திருவோட்டைப் பெற்ற ஆபுத்திரன் அளவிலா மகிழ்ச்சி அடைந்தான்; வருந்தி வந்தவர்க்கெல்லாம் வயிறார உணவளித்தான்; அவர் திருந்திய முகங் கண்டு இன்புற்றான். இத்தகைய இன்பத்தை 'ஈத்துவக்கும் இன்பம்' என்பர் திருவள்ளுவர்.

*ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை*
*வைத்திழக்கும் வன்க ணவர்"*

என்பது திருக்குறள். 'பொருள் மேன்மேலும் சேர்வது கண்டு இன்புறும் செல்வர்கள், அதனினும் சிறந்ததோர் இன்பம் உண்டு என்பதை அறியாரோ? ஏழையர்க்கு உண்டியும் உறையுளும் கொடுத்து, அவர் முகம் மலர் வதைக் கண்டு அருளுடையார் எய்தும் இன்பத்தை இப் பொருளுடையார் அறிந்தாரில்லையே' என்று வருந்து கின்றார் வள்ளுவர்.

அமுத சுரபியின் உதவியால் பசி நோயகற்றி, நாள்தோறும் அறம் வளர்த்த ஆபுத்திரன் பெருமையை அறிந்தான் விண்ணவர் வேந்தனாகிய இந்திரன்; உடனே மண்ணுலகிற் போந்து அமுத சுரபியுடன் விளங்கிய அறவோனைக் கண்டான்; தன்னைத் தானே அறிமுகம் செய்துகொண்டு, "ஐயனே! என்ன பயன் கருதி நீ அறஞ் செய்கின்றாய்! சொல். அதனை இப்பொழுதே தருகின்றேன்" என்றான். இம்மைச் செய்தது மறுமைக்கு ஆகும் என்ற எண்ணம் இறையளவும் இன்றி, ஈத்துவக்கும் இன்பமே இணையிலாப் பேரின்பம் எனக்

கருதிய ஆபுத்திரன், அமரர் கோமானை நோக்கிச் சிரித்தான்; பின்பு தன் கருத்தைக் கூறலுற்றான்: "அரசே! உன்னுடைய நாட்டில் எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தி வாழ்வர். அங்கு ஈவாரும் இல்லை; ஏற்பாரும் இல்லை. இங்கு நான், வருந்தி வந்தோர் அரும்பசி களைந்து, அவர் திருந்து முகங்கண்டு திளைக்கின்றேன். இதற்கு நிகரான இன்பம் உன் நாட்டில் என்ன இருக்கின்றது?" என்று மாற்றம் உரைத்தான். அது கேட்ட வானவர்கோன் வாயிழந்து மறைந்தான். இதனால் அன்றோ,

"ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்து
வாழ்வரே வண்கண வர்"

என்ற வாசகம் எழுந்தது?

## பிறப்பும் இறப்பும்

அறம் ஒன்றே அழியாத் தன்மை வாய்ந்தது என்றார் திருவள்ளுவர். 'மாந்தர் பெற்ற உடலும், உடைமையும், பிறவும் அழிந்தொழியும். ஒல்லும் வகையால் ஓவாது செய்யும் அறமே உறுதுணையாகும்' என்று வள்ளுவர் கருத்தை விளக்கிக் கூறுகின்றது மணிமேகலை.

"இளமையும் நில்லா, யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை யாவது"

என்று வலியுறுத்துகின்றார் சாத்தனார்.

இங்ஙனம் ஆன்றோர் அறிவுறுத்திய அறத்தின் சீர்மையை அறியாது, 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்று வாழ்வோரும் இவ்வுலகில் உண்டு. நாகர் மலையில் வாழ்ந்த மக்கள் அத் தகையவர். கருங்

கடலில் மரக்கலம் உடைந்த பொழுது, பாய்மரம் ஒன்றைத் தெப்பமாகப் பற்றிக் கொண்டு நாகர் நாட்டைச் சேர்ந்த ஆதிரையின் கணவனுகிய சாதுவன், நாகர் தலைவனைக் கண்டான். கள்ளும் ஊனும் நிறைந்த அந்நாட்டில் கரடிபோல் வீற்றிருந்தான் அத் தலைவன். தன் நாட்டிற்கு வந்தவனிடம் இரக்கமுற்று, "இந்த நம்பிக்கு வேண்டுமளவு கள்ளும் ஊனும் கொடுத்துப் பின் இளையவளாகிய ஒரு நங்கையையும் கொடுங்கள்" என்று கட்டளையிட்டான் அவன். அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்தான் சாதுவன். அது கண்டு வியப்புற்ற தலைவன்,

> "பெண்டிரும் உண்டியும் இன்றெனில் மாக்கட்கு
> உண்டோ ஞாலத்து உறுபயன்"

என்று வினவினான். பெண்டிரும் உண்டியுமே இவ்வுலகத்திற் கண்ட பயன் என்றுரைத்த நாகர் தலைவனிடம், மது உண்பதால் வரும் தீமையையும், உயிர்க்கொலையால் வரும் பாவத்தையும் சாதுவன் எடுத்துரைத்தான்; பிறப்பும் இறப்பும் மாறி மாறி வரும் என்றும், ஒரு பிறப்பில் பாவம் செய்தவர் மறுபிறப்பில் அதன் பயனை அடைவர் என்றும் திருவள்ளுவர் சொல்லிய அறவுரைகளை இவனுக்குத் தெரிவித்தான்.

> "உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு"

என்ற திருக்குறளின் கருத்தை,

> "பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
> உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்"

என்று உரைத்தான் சாதுவன்; இவ்வாறு மாறிமாறி வரும் பிறப்பில் ஓர் உயிர் செய்யும் நல்வினை தீவினைகளுக்குத்

தக்க வண்ணம் அதற்கு இன்ப துன்பங்கள் உண்டாகும் என்று அறிவுரை கூறினன்.

## குற்றங்களின் வகை

புத்தமதச் சார்பாக எழுந்த மணிமேகலை, பத்து வகையாகப் பாவங்களை வகுத்துக் கூறும். அவை மனம் மொழி மெய் என்னும் மூன்றாலும் மாந்தர் செய்யும் குற்றங்களாகும். மனத்தில் நிகழும் குற்றங்கள் மூன்று :

*"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்*
*நாமம் கெடக்கெடும் நோய்"*

என்ற வள்ளுவர் வாக்கில், மனத்தால் நிகழும் முக் குற்றங்களும் முறையாக உணர்த்தப்படுகின்றன. கௌதம புத்தர் இம் மூன்று குற்றங்களையும் முற்ற அறுத்தவர் என்பர். "போதி மூலம் பொருந்தியிருந்து, மாரனை வென்று வீரனுகி, குற்ற மூன்றும் முற்ற அறுக்கும் வாமன்" என்று புத்த தேவனைப் போற்றிப் புகழ்கின்றது மணிமேகலை. மனத்தில் நிகழும் இக் குற்றங்களை,

*"வெ.:கல் வெகுளல் பொல்லாக் காட்சி என்று*
*உள்ளந் தன்னில் உருப்பன மூன்றும்"*

என்று மணிமேகலை கூறும்.

இனி, வாக்கில் நிகழும் குற்றங்களையும் விரித்துரைக்கின்றார் வள்ளுவர். பொய் சொல்லுதல், புறங்கூறுதல், வன்சொல் வழங்குதல், வெற்றுரையாடுதல் என்னும் நான்கும் வாக்கிலே விளையுங் குற்றங்களாகும். இவற்றை ஒழித்தல் வேண்டும் என்று அழுத்தமாகக் கூறுகின்றது திருக்குறள்:

*"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற*
*செய்யாமை செய்யாமை நன்று"*

என்ற வள்ளுவர் வாக்கில், பொய்யாமையே சிறந்த அறம் என்பது வற்புறுத்தப்படுகின்றது. ஒருவன் இல்லாதவிடத்து அவனைப் பழித்தும் இழித்தும் பேசுதல் குற்றம் என்பது வள்ளுவர் கொள்கை. புறங்கூறி வாழ்வதினும் இறந்தொழிதல் நன்று என்றார் வள்ளுவர்.

*"புறங்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலிற் சாதல்*
*அறங்கூறும் ஆக்கம் தரும்"*

என்பது அவர் வாக்கு.

வாக்கிலே வன்சொல் வரலாகாது. இன்சொல்லால் இன்பம் பெருகும்; துன்பம் குறையும்; அறம் வளரும்; பாவம் தேயும்.

*"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ*
*வன்சொல் வழங்கு வது?"*

என்று கேட்கின்றார் வள்ளுவர். வன்சொல்லைப் போலவே வெறுஞ் சொல்லும் வழங்கலாகாது என்பது வள்ளுவர் கொள்கை. அறம் பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைப் பேசலாகாது என்று திருக்குறள் தெளிவுறக் கூறுகின்றது.

*"சொல்லுக சொல்லிற் பயனுடைய, சொல்லற்க*
*சொல்லிற் பயனிலாச் சொல்"*

என்பது வள்ளுவர் அறம். இவ்வாறு அறத்துப் பாலில் வள்ளுவர் பரக்கக் கூறிய உண்மைகளைத் தொகுத்துக் கூறுகின்றது மணிமேகலை.

*"பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்*
*சொல்எனச் சொல்லில் தோன்றுவ நான்கும்"*

மாந்தரால் விலக்கப்பட வேண்டும் என்றார் சாத்தனார். இவற்றோடு உடம்பில் தோன்றும் கொலை, களவு, இச்சை

என்னும் குற்றங்கள் மூன்றையும் கூட்டிப் பாவங்கள் பத்து என்று புத்தமதம் கூறும்.

## இருவகைப் பற்று

இவ்வுலகில் பிறந்தும் இறந்தும் அலமரும் உயிர்கள் கரையேறுவதற்கு வழி காட்டுகின்றார் திருவள்ளுவர். 'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்' என்பது அவர் வாய் மொழி. யான், எனது என்னும் இருவகைப் பற்றும் அற்ற நிலையில் பிறப்பு ஒழியும். 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்ற திருவாக்கும் இவ்வுண்மையை உணர்த்துவதாகும்.

*"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்*
*பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்*
*பற்றின் வருவது முன்னது; பின்னது*
*அற்றோர் உறுவது அறிக"*

என்ற மணிமேகலை, திருக்குறளின் கருத்தைத் தழுவி எழுந்ததாகும்.

இருவகைப் பற்றையும் விட்டொழித்தற்குரிய வழியையும் காட்டுகின்றார் வள்ளுவர். ஒரு பற்றும் இல்லாத இறைவனைப் பற்றிக்கொண்டால் அகப்பற்றும் புறப்பற்றும் அழிந்தொழியும். இறைவன் திருவடியே தஞ்சம் என்று அடைந்தோரே பற்றறுத்து வீடு பெறுவர் என்பது,

*"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்*
*பிறவாழி நீந்தல் அரிது"*

என்னும் திருக்குறளால் விளங்கும். அறவாழி அந்தணன் என்ற தொடர் இறைவனைக் குறிக்கும். புத்ததேவன் அறவாழி என்னும் தரும சக்கரத்தால் எல்லா உயிர்களையும் ஆள்கின்றான் என்பது புத்தமதக்

கொள்கை. "அறக்கதிர் ஆழி திறப்பட உருட்டிக் காமற் கடந்த வாமன்" என்ற மணிமேகலையடிகளில் தரும சக்கரத்தை உருட்டிப் புத்தர்பெருமான் உலகாளும் தன்மை குறிக்கப்படுகின்றது. இக கருத்துப் பற்றியே ' ஆதி முதல்வன், அறவாழி ஆள்வோன்' என்று மேலும், பாடிற்று மணிமேகலை. திருவள்ளுவர் குறித்த அறவாழி என்பது புத்த தேவனது தரும சக்கரமே என்று பொருளுரைத்தலும் உண்டு. [8]

## தமக்குரியரும் பிறர்க்குரியரும்

அன்பே இறைவனது திருவுருவம் என்று எல்லாச் சமயங்களும் கூறும். எனவே, அன்பு வடிவாய இறைவனை அடைவதற்கு அன்பே சிறந்த வழி என்பார் ஆன்றோர்.

*"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு"*

என்று அன்புடையாரின் தன்மையை அறிவித்தார் திருவள்ளுவர். அன்பிலார் தம் நலமே பேணுவர்; அன்புடையார் பிறர் நலம் பேணுவர் என்ற திருக்குறளின் கருத்தை மணிமேகலை எடுத்தாளுகின்றது. அருளறம் பூண்ட புத்த தேவனை,

*"தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்றும்*
*"பிறர்க்கு அறம் முயலும் பெரியோன்"*

என்றும் போற்றுகின்றது மணிமேகலை. அப் பெருமான் வாழ்ந்து காட்டிய நெறியைக் கடைப்பிடித்தால் சுய நலம் வீழும்; பொதுநலம் வாழும். இச் செந்நெறியை ஒரு மன்னன் வரலாற்றால் விளக்குகின்றது அக் காவியம்.

---

*8. "அறவாழி என்பதனைத் தரும சக்கரமாக்கி, அதனை யுடைய அந்தணன் என்று உரைப்பாரும் உளர்"— திருக்குறள் 8, பரிமேலழகர் உரை.*

சாவக நாட்டின் தலைநகராகிய நாகபுரத்தில் புண்ணிய ராசன் என்பவன் அரசு வீற்றிருந்தான். அவன் ஆட்சியில் அறம் வளர்ந்தது; மறம் தளர்ந்தது. குடிகள் இன்புற்று வாழ்ந்தனர். இந் நிலையில் அம் மன்னன், "தவஞ் செய்வார் தங் கருமஞ் செய்வார்" என்னும் பொருளுரையை நினைந்து, அரசாட்சியில் வெறுப்புற்றுத் துறவறத்தை மேற்கொள்ள விரும்பினன். அதை அறிந்த அமைச்சன், "அரசே! இந் நாட்டில் நீ பிறப்பதற்கு முன் பன்னீராண்டு மழை இல்லாமற் போயிற்று. உயிர்கள் எல்லாம் வறுமை வாய்ப்பட்டு வாடி வருந்தின. அக்காலத்தில் நீ தோன்றினை. நீ பிறந்தது முதல் இந் நாட்டில் வளம் சிறந்தது; துயரம் தீர்ந்தது. நீ அரசு துறந்தால் தாயைப் பிரிந்த சேய் போல் நாடு அலமரும். உன்னையே நோக்கி வாழும் உலகத்தைக் காவாமல் தன்னலம் கருதித் துறத்தல் தக்க தன்று" என்று கூறி மேலும்,

*"தன்உயிர்க்கு இரங்கான் பிறஉயிர் ஓம்பும்*
*மன்னுயிர் முதல்வன் அறமும் ஈ தன்றால்"*

என்று புத்த தேவனது அருள் நெறியை அறிவுறுத்தினன். அவ்வுரை கேட்ட மன்னன் மன்னுயிரைத் துறந்து செல்லும் கருத்தை ஒழித்தான் என்று மணிமேகலை கூறுகின்றது. பிறர்க்கென வாழும் பெருந்தகைமை, தொன்று தொட்டுத் தமிழ் நாடு போற்றும் பண்பாகும்.[9]

9. *"உண்டா லம்மஇவ் வுலகம்*
*தமக்கென முயலா நோன்றாள்*
*பிறர்க்கென வாழுநர் உண்மை யானே"*

—*புறநானூறு*

# சிந்தாமணியிலே வள்ளுவர்

**சிந்தாமணியின்** கதாநாயகன் சீவகன். அவனுடைய தந்தையாகிய சச்சந்தன் ஏமாங்கத நாட்டு மன்னவன். இளமையிலேயே அரசாளும் உரிமையைப் பெற்றான் அம் மன்னன். அரசாங்கத்தில் கட்டியங்காரன் என்பவன் முதல் அமைச்சனாக விளங்கினான். அவன் மதிநலம் வாய்ந்தவன்; சூழ்ச்சியில் வல்லவன். அவனோடு மற்றும் சில அறிஞரும் அமைச்சராயிருந்தனர். அவர்களுள் ஒருவன் நிமித்திகன் என்னும் பெயருடையவன்; கல்வி கேள்விகளிற் சிறந்தவன்; செந்நெறி திறம்பாத சீலன்; உண்மையை நேராக எடுத்துரைக்கும் உரவோன். இத் தகைய அமைச்சரைத் துணைக்கொண்டு சச்சந்தன் செம்மையாக அரசு புரிந்தான்.

அம் மன்னனுக்குத் திருமணம் நிகழ்ந்தது. குலத்திலும் நலத்திலும் தலைசிறந்த விசயை என்னும் மங்கை அவன் மனைவியாயினள். அழகெலாம் ஒருங்கே வாய்ந்த அந் நங்கையிடம் அளவிறந்த காதல் கொண்டான் அம் மன்னன். அரசாட்சியில் அவன் கருத்துச் செல்லவில்லை; அந் நிலையில் முதலமைச்சனாகிய கட்டியங்காரனைத் தனியாக அழைத்து, "அன்பனே! கணப்பொழுதும் என் காதலியைப் பிரிந்திருக்க முடியவில்லை. ஆதலால், அரசாளும் பொறுப்பை நீயே ஏற்றுக் கொள்க" என்று கூறினான். அவ்வுரை கேட்ட அமைச்சன் உள்ளத்தின் உள்ளே மகிழ்ந்தான்; ஆயினும், அதனைப் புறத்தே காட்டிக்

கொள்ளாது, அரசன் கருத்திற்கு இசைந்து நாடாளும் பணியை மேற்கொண்டான்.

## அமைச்சர் கடமை

அரசன் செய்கையை அறிந்தான் நிமித்திகன்; நெஞ்சம் துடித்தான்; காதலி மூழ்கிக் கருத்தழிந்தான் காவலன் என்று வருந்தினான்; அறிவிழந்து தவறு செய்த அரசனிடம் போந்து அறிவுரை கூறுதல் தன் கடமை என்று எண்ணினான்.

*"அறிகொன்று அறியான் எனினும் உறுதி*
*உழையிருந்தான் கூறல் கடன்"*

என்று திருக்குறள் விதித்த வண்ணம் மன்னனிடம் துணிந்து சென்று, "ஐயனே! மாநிலமாளும் உரிமையை மற்றொருவனிடம் ஒப்புவித்தல் நன்றன்று; அதனால் உனக்கே தீங்கு வரும்" என்று உறுதியாக எடுத்துரைத்தான். அவன் சொல்லிய சொல் மன்னன் செவியில் ஏறவில்லை. தன் கருத்திற்கு மாறாகப் பேசிய அமைச்சனை மன்னன் மனமார வெறுத்தான்; முதலமைச்சனிடம் அழுக்காறு கொண்டு அவன் இழுக்குரை பகர்ந்தான் என்று எண்ணினான்; வெறுப்புடன் அவனை நோக்கி, "அமைச்சனே! கட்டியங்காரன் எனக்கு உயிராக உள்ளவன்; என்னினும் இனியார் அவனுக்கு யாரும் இல்லை. போர் பல புரிந்து அவன் என் பகைவரை வென்றான்; புகழ் தந்தான். அவனுக்குச் செய்யத்தக்க சிறப்பினை நான் செய்தேன். அதற்கு மாறாக நீ ஒன்றும் சொல்லத் தேவையில்லை. உன் அளவில் நீ அமைக" என்று கடுமையாகப் பேசினான்.

அரசன் சொல்லிய சொற்களை அமைதியாகக் கேட்டான் நிமித்திகன்; 'கேடு வரும் பின்னே, மதி கெட்டு

வரும் முன்னே' என்னும் முதுமொழிக்கு ஓர் எடுத்துக் காட்டாக நின்ற அரசனை நோக்கி,

"மூரித்தேன் தாரினாய்! நீ முனியினும் உறுதி நோக்கிப்
பாரித்தேன் தரும நுண்ணூல் வழக்குஅது ஆதல் கண்டே"

என்று பேசினான்; "மன்னனே! என் சொல்லை நீ செவியிற் கொள்ளாது சீற்றமுற்றாய். ஆயினும், உனக்கு உறுதி பயக்கத் தக்க அறிவுரை கூறுதல் என் கடமை. அறநூல் அவ்வாறு கூறுகின்றது. என் கடமையை நிறைவேற்றிவிட்டேன். இப்பொழுதே இந் நாட்டை விட்டுச் செல்கின்றேன்" என்று சொல்லி அவனை விட்டகன்றான். இத் தகைய நல்லமைச்சன் வாயிலாகத் திருக்குறளைத் 'தரும நுண்ணூல்' என்று போற்றுகின்றது சிந்தாமணி.

கரவாடும் வன்னெஞ்சனாகிய கட்டியங்காரன் இன்பத்துறையில் மூழ்கிய மன்னனை வஞ்சித்து ஒரு நாள் அரண்மனையை வளைந்துகொண்டான். அது கண்டு திடுக்கிட்டான் அரசன்; கருவுற்றிருந்த காதலியை ஓர் ஆகாய விமானத்தில் ஏற்றிக் கோட்டைக்கு வெளியே அனுப்பிவிட்டுப் பகைவனோடு கடும்போர் புரிந்து மாண்டான். அரசியை ஏற்றிச் சென்ற விமானம் இராப்பொழுதில் ஒரு சுடுகாட்டில் விழுந்தது. விழுந்த அதிர்ச்சியில் அரசி ஓர் ஆண் மகவை மயானத்தில் ஈன்று மயக்கமுற்றாள். அம்மகவை எடுத்து வளர்த்தான் அவ் வழிப்போந்த ஒரு வணிகன்; அழகின் கொழுந்தெனத் திகழ்ந்த அம் மைந்தனுக்குச் சீவகன் என்று பெயரிட்டான்; பல்கலையும் படைக்கலமும் பயிற்றினான். கண்டோர் கண்ணையும் கருத்தையும் கவரும் கட்டிளங் காளையாகத் திகழ்ந்தான் சீவகன்.

## புதல்வர் தரும் புகழ்

ஒரு நாள் மலைச் சாரலில் மேயச் சென்ற நகரப் பசுக்களை யெல்லாம் அங்கிருந்த வேடர்கள் வளைத்துக் கவர்ந்து கொண்டார்கள். மாடு மேய்க்கச் சென்ற இடையர், மனம் உளைந்து நாட்டின் காவலனாகிய கட்டியங்காரனிடம் போந்து முறையிட்டனர். 'அழிம்பு செய்த வேட்டுவரை வென்று பசுக்களை மீட்டு வருக' என்று படைத் தலைவரை ஏவினான் காவலன். அப் பணி தலைமேற்கொண்டு எழுந்தது மன்னன் சேனை. மலையடி வாரத்தில் இரு திறத்தார்க்கும் போர் நிகழ்ந்தது. இறுதியில், மன்னன் படை தோல்வியுற்று மீண்டது. அது கண்டு வருத்தமுற்ற இடையர் குலத்தலைவனாகிய நந்தகோன், பசுக்களை மீட்டுத் தரும் வீரனுக்குப் பேரழகியாகிய தன் மகளை மணஞ் செய்து கொடுப்பதாக முரசறைவித்தான். அப்போது சீவகன் போர்க்கோலங் கொண்டு எழுந்தான். வேடர் இருந்த மலையடி வாரத்திற் போந்து அம்பு மாரி பொழிந்தான். அவன் திறமறிந்த வேடர் அஞ்சி ஓடினர். அவருள் ஒருவரையும் வடுப்படுத்தாது பசுக்களை மீட்டுக் கொணர்ந் தான் சீவகன். மன்னன் சேனை செய்ய மாட்டாத செயலைத் தனி யொருவனாகச் செய்து முடித்த சீவகனை வாயார வாழ்த்தினர் நகர மக்கள். கன்றுகளின் துயரம் தீர்த்து நகரத்தின் மானத்தையுங்காத்த வீரனை வரவேற்பதற் காக வீதியின் இருமருங்கும் நிறைந்து நின்றனர் நகர மாந்தர். அவ்வழியாக வந்தான் சீவகன். அவன் நடையைப் புகழ்ந்தார் சிலர்; உடையைப் புகழ்ந்தார் சிலர்; அவன் அழகைப் பாராட்டினர் சிலர்; அருளைப்

பாராட்டினர் சிலர். "இவன் தாய் என்ன மாதவம் செய்தாளோ" என்று தாய்மார் வியந்து நின்றனர்.

"செம்மலைப் பயந்த நற்றாய் செய்தவம் உடையள் என்பார்
எம்மலைத் தவம்செய் தாள்கொல் எய்துவம் யாமும்
என்பார்"

என்று அன்னார் தாய்மை உணர்ச்சியைச் சிந்தாமணி பாடிற்று. "பெருந்தவம் செய்தாலன்றிச் சீவகனைப் போன்ற மைந்தனைப் பெறுதல் இயலாதே! இவனைப் பெற்ற தாய் எத்துணைக் காலம் தவம் செய்தாளோ! எந்த மலையில் இருந்து தவம் செய்தாளோ? அந்த மலை இன்னதென்று அறிந்தால் நாமும் அங்கே சென்று தவம் முயன்று இவனைப் போன்ற மைந்தனைப் பெறலாமே" என்று பேசினர் தாய்மார்கள். இத்தகைய புகழுரையைத் தன் அன்னைக்கு உரிமையாக்கினான் சீவகன் என்று கூறும் சிந்தாமணிச் செய்யுளில் ஒரு திருக்குறளின் மணம் கமழ்கின்றது.

"மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்"

என்றார் திருவள்ளுவர். இந்த மைந்தனைப் பெறுவதற்கு இவன் தந்தை என்ன தவம் செய்தானோ என்று உலகத்தார் சொல்லும் வண்ணம் வாழ்தலே மகன் தந்தைக்குச் செய்யும் கைம்மாறாகும் என்ற திருக்குறளின் கருத்தை ஆதரித்து, மகன் அன்னைக்குச் செய்யும் உதவியும் அதுவே என்று சிந்தாமணி எடுத்துரைக்கின்றது.

## காலமும் இடமும்

காவலனாகிய கட்டியங்காரன் வஞ்சனையால் அர செய்தியவன் என்றும், அவனே தன் தந்தையாகிய

சச்சந்தனைக் கொன்றவன் என்றும் தக்கோர் வாயிலாக அறிந்த சீவகன் தள்ளருஞ் சீற்றம் கொண்டான். அவன் உள்ளம் துடித்தது; குருதி கொதித்தது. கட்டியங்காரனைக் கொன்று முடிப்பதாக அவன் வஞ்சினம் கூறினான். அதற்கு ஏற்ற காலமும் இடமும் கருதியிருந்தான்.

*"ஞாலம் கருதினும் கைகூடும் காலங்*
*கருதி இடத்தாற் செயின்"*

என்பது வள்ளுவர் வாய்மொழி. காலமும் இடமும் தெரிந்து, போர் செய்யும் வீரனே வெற்றி பெறுவான் என்பது இக் குறளின் கருத்து. கூகை என்னும் பறவை காக்கையினும் பன்மடங்கு வலிமையுடையதாகும். ஆயினும், பகற்பொழுதில் எளிதாகக் காக்கை கூகையை வென்றுவிடும்.[1] தண்ணீரில் முதலையை வெல்லுதல் அரிது. தரையில் அதனைக் கொல்லுதல் எளிது.[2] ஆதலால், ஏற்றபொழுதும் இடமும் தேர்ந்து, போர் தொடங்குதல் வேண்டும் என்று கூறுகின்றார் திருவள்ளுவர். அவர் அருளிய பொருளையும் மொழியையும் பொன்னேபோற் போற்றுகின்றது சிந்தாமணி.

*"இடத்தொடு பொழுதும் நாடி*
*எவ்வினைக் கண்ணும் அஞ்சார்*
*மடப்பட லின்றிச் சூழும்*
*மதிவல்லார்க் கரிய துண்டோ*

---

1 *"பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்*
*வேந்தர்க்கு வேண்டும் பொழுது"—திருக்குறள் 481.*

2. *"நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்*
*நீங்கின் அதனைப் பிற" — திருக்குறள் 495.*

*கடத்திடைக் காக்கை ஒன்றை*
*ஆயிரங் கோடி கூகை*
*இடத்திடை அழுங்கச் சென்றாங்*
*கின்னுயிர் செகுத்த தன்றே''*

என்பது சிந்தாமணிப் பாட்டு.

## மனத்திண்மை

கட்டியங்காரனை வெல்வதற்குக் காலம் பார்த்திருந்த சீவகன், துணைவலிமையும் படைவலிமையும் பெற்றுப் போர் புரிய எழுந்தான். பேராண்மை வாய்ந்த சீவகனும் கட்டியங்காரனும் போர்க்களத்தில் வீரம் விளைத்தனர். மனத் திட்பம் வாய்ந்த வீரர்கள் மாற்றாருடைய படைக்கலங் கண்டு மருளுவதில்லை. பகைவரது வெம்படை வேகமாக முகத்தை நோக்கி வரும்பொழுது, விழித்த கண் இமையாது நிற்றலே வீரத்திற்கு அழகு என்றார் வள்ளுவர்.

*''விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்*
*ஓட்டன்றோ வன்க ணவர்க்கு''*

என்று திருக்குறள் பாடிற்று. அமர்க்களத்தில் பகைவரை வெகுண்டு நோக்கிய கண், அவர் எறியும் படைக்கலங் கண்டு வெருண்டு இமை கொட்டுமாயின், அதுவே தோல்வியாகும் என்பது இக் குறளின் பொருள்.

சீவகனும் கட்டியங்காரனும் வெம்போர் நிகழ்த்திய களத்தில், கண்ணிமையாத வீரரும் காட்சியளித்தனர்; கண்ணிமைத்த கோழைகளும் காணப்பட்டனர். கட்டியங்காரனுடைய வீர மைந்தர் நூற்றுவரையும் சீவகன் வென்று கொன்ற பொழுது விதியின் கொடுமையை நினைந்து மனம் நொந்து நின்றான் அம் மன்னன். அது கண்டு சீவகன் சிரித்தான். அச் சிரிப்பில்

அமைந்த குறிப்பை அறிந்தான் கட்டியங்காரன். மானவீரம் அவன் மனத்தில் முறுகி எழுந்தது. எதிரே நின்ற சீவகனை நோக்கி, "வீரனே! வெற்றியும் தோல்வியும் விதியினால் ஆகும். ஆயினும் ஒன்று கூறுவேன் கேள்! நாம் இருவரும் போர் புரியும்போது என்னை நோக்கிவரும் உன்னுடைய படைக்கலங் கண்டு நான் கண்ணிமைப்பேனாயின் நீ சிரித்தல் தகும். அதற்கு முன் சிரித்தல் சரியன்று" என்று அவன் வீரமொழி பேசினான்.

"வெல்வது விதியி னாகும் வேல்வரின் இமைப்பே னாயின்
சொல்லிநீ நகவும் பெற்றாய்! தோன்றல்"

என்ற சிந்தாமணி அடிகளில் கட்டியங்காரனுடைய மனத்திட்பம் விளங்குகின்றது. இவ்வாறு மானம் புலப் படுத்திய மன்னன், மேலும் ஒன்று கூறினான்: 'இன்று நிகழும் போரில் நான் வீரமிழந்து இழுக்குற்றேனாயின் இல்லாளை அஞ்சி நல்விருந்தினரைப் பேணுதொழிந்த புல்லாளனாகக் கடவேன்' என்றான். இவ்வஞ்சினம்,

"இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்"

என்னும் திருக்குறளைத் தழுவி எழுந்ததென்பது வெளிப்படை.

கட்டியங்காரனைப்போல் மனத்திட்பம் அற்றவன் மகதையர்கோன். போர்க்களத்தில் அவனைக் கொன்று முடிக்கக் கருதி நபுலன் என்னும் வீரன் கொடிய வாளை ஓச்சினான். அந் நிலையில் மகதை கண்ணிமைத்தான். கோழையாகிய அவனைக் கொல்லுதல் வீரமன்று என்று விலகிச் சென்றான் நபுலன்.

*"ஏந்தல்தன் கண்கள் வெய்ய இமைத்திட எறிதல் ஓம்பி
நாந்தக உழவன் நாணி நக்குநீ அஞ்சல் கண்டாய்"*

என்று கூறிய நபுலன் மொழிகளில் இருவர் செய்கையும் இனிது விளங்குகிறது.

## ஆண்மையின் அழகு

அமர்க்களத்திலும் அறிநெறியைக் கடைப்பிடித்தலே வீரத்திற்கு அழகு என்பது திருவள்ளுவர் கொள்கை.

*"பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு"*

என்பது அவர் வாக்கு. சீறிச் சிவந்த கண்களே வீரத்தின் சின்னம் என்பர். ஆயினும், ஊனமுற்ற பகைவனை ஊறு செய்தல் ஈனமாகும். போர்க் களத்தில் எளியார்மீது வலியார் இரக்கம் காட்டுவர். அதுவே *ஊராண்மை* எனப்படும். பேராண்மையின் கொழுந்தெனத் திகழ்ந்து அழகு செய்வது ஊராண்மையே யாகும். இவ்விரு வகை ஆண்மையும் வாய்ந்து, வள்ளுவர் வகுத்த நெறியில் நின்று போர் நிகழ்த்திய வீரரைச் சிந்தாமணி வியந்து பாராட்டுகின்றது. சீவகன் தோழருள் ஒருவனாகிய நகுலன் என்பவன் தன் குதிரையின்மீது அமர்ந்து, எதிரே வந்த யானை வீரனைக் கொல்வதற்கு வாளோச்சினான். அவனைக் கண்டு அஞ்சாத மாற்றான் இரு கைகளையும் கொட்டி ஆரவாரித்தான். அப்போது அவன் நிலை நன்றாகத் தெரிந்தது. கையிலே படைக்கலமின்றிப் போர் புரிய நின்றான் அவ் வீரன் என்பதை அறிந்த நகுலன் அவனை வாளால் எறிய நாணி, மற்றொரு பக்கம் சென்றான் என்று சிந்தாமணி கூறுகின்றது.

வில்லெடுத்துப் போர் புரியும் வீரனை 'வில்லேருழவன்' என்றார் திருவள்ளுவர். அந்த முறையில் வேலெடுத்துப் போர் செய்யும் வீரனை 'அயிலுழவன்' என்றும், வாட்போர் புரியும் வீரனை 'வாளுழவன்' என்றும் சிந்தாமணி குறிக்கின்றது.

*"வீறின்மையின் விலங்காம் என*
*மதவேழமும் எறியான்*
*ஏறுண்டவர் நிகராயினும்*
*பிறர்மிச்சில் என்றெறியான்*
*மாறன்மையின் மறம் வாடுமென்று*
*இளையாரையும் எறியான்*
*ஆறன்மையின் முதியாரையும்*
*எறியான் அயில் உழவன்"*

என்று அறநெறி திறம்பாத வேலுழவன் செய்கையை அழகுறச் சிந்தாமணி பாடிற்று. 'விலங்கைக் கொல்லுதல் வீரமன்று; புண்பட்ட வீரனை நலிதல் பண்பாடன்று; இளையோரையும் முதியோரையும் ஊறு செய்தல் அறமன்று என்று கருதுவான் உண்மை வீரன்' என்பது இப்பாட்டால் இனிது விளங்கும்.

வெற்றி வீரனாகிய சீவகன், கட்டியங்காரனைப் போர்க்களத்தில் வென்று கொன்றான். சூழ்ச்சியால் அரசெய்திய வஞ்சகன் அழிந்து ஒழிந்தான் என்று நெஞ்சம் குளிர்ந்தனர் நாட்டு மக்கள்.

## இறையொளி

முறையாக அரசுரிமை பெற்ற மன்னனிடம் ஓர் ஒளியுண்டு என்பது முன்னையோர் கொள்கை.

*"இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற*
*ஒளியோடு ஒழுகப் படும்"*

என்று பாடினார் வள்ளுவரும். ஒளி என்பது தெய்வத் தன்மை. நாட்டில் வாழும் மக்களை முறைசெய்து காப்பாற்றுதலால் அரசன் இறைவனாகப் போற்றப் படுவான் என்றார் வள்ளுவர். தமிழ்ச் சொல்லாட்சியும் இதற்குச் சான்று பகர்வதாகும். இறைவன் என்ற சொல் கடவுளையும் குறிக்கும்; அரசனையும் குறிக்கும். கடவுளுக்குரிய ஆலயத்தையும் அரசனுக்குரிய அரண் மனையையும் கோயில் என்ற சொல்லால் உணர்த்துதல் பழந்தமிழ் வழக்கு.

அரசன்பால் அமைந்த தெய்வத் தன்மையே உலகத்தைக் காக்கும் என்று சிந்தாமணி கூறு கின்றது.

> *"உறங்கு மாயினும் மன்னவன் தன்னொளி*
> *கறங்கு தெண்டிரை வையகம் காக்குமால்"*

என்ற செய்யுளில், திருவள்ளுவர் கருத்தை ஏற்றுப் போற்றுகின்றார் சிந்தாமணி ஆசிரியர்.

## அமைச்சரும் ஒற்றரும்

அரசர் தெய்வத் தன்மை வாய்ந்தவரேயாயினும் நல்லமைச்சரைத் துணை கொண்டு அன்னார் ஆட்சி புரிதல் வேண்டும் என்று திருக்குறள் அறிவிக் கின்றது.

> *"சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்*
> *சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்"*

என்று பணித்தார் வள்ளுவர். எப்பொருளையும் ஆராய்ந்து சொல்லும் அமைச்சரே அரசாங்கத்தின் கண் போன்றவர். அவர் காட்டிய நெறியைக் கடைப் பிடித்து ஆட்சி புரிதலே அரசர்கு ஏற்றதாகும் என்பது

இக் குறளின் கருத்து. இதனாலேயே, 'அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்' என்று பாடினான் ஒரு பாண்டி மன்னன்.

அமைச்சரைப் போலவே ஒற்றரும் அரசாங்கத்தில் ஒரு சிறந்த அங்கம் ஆவர். உள்நாட்டிலும் அயல் நாட்டிலும் மறைவாகப் போந்து ஆங்காங்கு நிகழ்வன வற்றை உள்ளவாறுணர்ந்து தம் அரசனிடம் அறிவிப் பவரே ஒற்றர் எனப்படுவர். ஒற்றர்கள் உணர்த்தும் செய்திகளை ஆராய்தற்குரிய முறையையும் அறிவிக் கின்றார் வள்ளுவர்:

*"ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றும்ஓர்*
*ஒற்றினால் ஒற்றிக் கொளல்"*

என்று பணிக்கின்றது திருக்குறள். இவ்வாறு அமைச் சரையும் ஒற்றரையும் பற்றித் திருக்குறள் கூறும் உண்மைகளைத் தொகுத்துரைக்கின்றார் சிந்தாமணி ஆசிரியர்:

*"ஒற்றர் தங்களை ஒற்றின் ஆய்தலும்*
*கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்*
*கற்றல் சூழ்ந்துபெ ருக்கலும் சூதரோ*
*கொற்றம் கொள்குறிக் கொற்றவற் கென்பவே"*

என்ற சிந்தாமணிப் பாட்டில் ஒற்றரைக்கொண்டு ஒற்றரை ஆராய்தலும், கற்றறிந்த அமைச்சரைத் துணைக்கொண்டு அரசாளுதலும் கொற்றவர்க்கு உற்ற செயல்களாகக் குறிக்கப்படுகின்றன.

## பொருளின் திறம்

அரசர்க்குரிய ஆறு அங்கங்களுள் ஒன்று பொருள்.[3] அதுவே பகையறுக்கும் படை யாதலால் பொருட்

3. *"படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்*
*உடையான் அரசருள் ஏறு"—திருக்குறள், 381.*
*கூழ் என்பது பொருள்.*

பெருக்கமே அரசரது குறிக்கோளாக இருத்தல் வேண்டும் என்பது திருவள்ளுவர் கொள்கை.

"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகு அதனிற் கூரியது இல்"

என்பது அவர் வாய்மொழி. 'பொருளால் பகை பணியும்; போர் ஒடுங்கும்; புகழ் ஓங்கும். ஆதலால் 'செய்க பொருளை' என்று வள்ளுவர் பணித்தார். அவ்வண்ணமே சிந்தாமணி ஆசிரியரும் சொல்கின்றார் :

"செய்க பொருள்யாரும், செறுவரைச் செறுகிற்கும்
எஃகு பிறிதில்லை"

என்ற பாட்டு, திருக்குறளை அடியொற்றிச் செல்கின்றது. இக் கருத்தை மேலும் விளக்கிக் கூறுகின்றது சிந்தாமணி. பொருளுடைய அரசனிடம் நால்வகைப் படைகளும், பல்வகைப் படைக்கலங்களும் பெருகும். அவை பெருகவே நானிலம் முழுவதும் அவன் கொடியின்கீழ் அமையும். அதனால், மேலும் பொருள் பெருகும். ஆதலால், ஆற்றல் சான்ற பொருளால் ஆகாதது ஒன்றுமில்லை :

"பொன்னின் ஆகும் பொருபடை, அப்படை
தன்னின் ஆகும் தரணி, தரணியில்
பின்னை ஆகும் பெரும்பொருள் ; அப்பொருள்
துன்னும் காலைத் துன்னாதன இல்லையே"

என்பது சிந்தாமணி.

மன்னர்க்குரிய அங்கங்களுள் ஒன்றாக விதந்துரைக்கப் பட்ட பொருள், இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது என்று திருவள்ளுவர் கருதுகின்றார். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது அவர் திருவாக்கு. பொருள் செய்வதற்கு முயற்சியே சிறந்த

வழி என்று திருக்குறள் செப்பமாய்க் கூறுகின்றது.[4] முயற்சியால் தேடும் பொருளைத் தமக்கும் பிறர்க்கும் பயன்படுத்தாமல் சேர்த்து வைத்தல் தவறு. ஒல்லும் வகையால் பொருளுடையார் எல்லாரும் அறம் செய்தல் வேண்டும்.

## அறஞ்செய்யும் காலம்

'அன்றறிவாம் என்னாது அறம் செய்க' என்று பணித்தார் வள்ளுவர். பின்னொருகால் அறம் செய்யலாம் என்று எண்ணலாகாது. 'நன்றே செய்தலும் வேண்டும்; நன்றும் இன்றே செய்தலும் வேண்டும்; இன்றும், இன்னே செய்தலும் வேண்டும்' என்று உரைத்தனர் ஆன்றோர். இவ்வாக்கைப் புறக்கணித்து வாழ்ந்த செல்வன் ஒருவன் ஏமாற்ற மடைந்த செய்தியைக் கூறுகின்றது சிந்தாமணி.

'செய்க பொருளை' என்று வள்ளுவர் கூறிய கருத்தை மனத்திற்கொண்டு, பாடுபட்டுப் பணம் தேடினான் ஒருவன்; ஆனால், அவர் விதித்தவாறு அறம் செய்தானில்லை; மனை வாழ்க்கையில் மிஞ்சிய பொருளைப் பெட்டியிலே பூட்டிவைத்துப் பாதுகாத்தான். சேருங் காலத்தில் பொருளைச் சேர்த்து, சாகுங்காலத்தில் அதனைச் செலவிட்டு அறஞ் செய்யலாம் என்பது அவன் கருத்து. ஆனால், அவன் திட்டமிட்டிருந்தபடி நடை பெறவில்லை. முதுமை வருமுன்னே ஒருநாள் திடீரென்று அவன் நோய்வாய்ப் பட்டான். வாய் பேச முடிய வில்லை; கால் நடக்க முடியவில்லை; அந் நிலையில் அறம்

4. "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"—திருக்குறள் 616.

செய்ய விரும்பிற்று அவனுள்ளம். அருகே நின்ற மனையாளை நோக்கி, பெட்டியிலுள்ள பண முடிப்பை எடுத்து வரும்படி கைக்குறிப்பால் அவன் அறிவித்தான்; அவனைச் சூழ்ந்து நின்ற சுற்றத்தார் அக் குறிப்பின் கருத்துணராது திகைத்தனர். அப்போது அவன் மனையாள், "ஐயோ! பாவியேன் என்ன செய்வேன்! விளாம்பழம் கேட்கின்றீர்களே! உங்கள் நோய்க்கு அது ஆகுமா!" என்று அங்கலாய்த்தாள்.

"கையால் பொதித்துணையே காட்டக்
கயற்கண்ணாள் அதனைக் காட்டாள்
ஐயா விளாம்பழமே என்கின்றீர்
ஆங்கதற்குப் பருவம் அன்றுஎன்
செய்கோ எனச்சிறந்தாள் போல்சிறவாக்
கட்டுரையால் குறித்த எல்லாம்
பொய்யே பொருளுரையா முன்னே
கொடுத்துண்டல் புரிமின் கண்டீர்"

என்று சிந்தாமணிச் செய்யுளில் இச் செய்தி குறிக்கப் படுகின்றது. [5]

மனையாள் சொல்லின் மாயப் பொய்யினைக் கேட்டான் பிணியாளன்; மனம் உடைந்தான்; யாதும் செய்ய வகையின்றி விழித்தான்;

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்"

என்ற வள்ளுவர் வாய்மொழியைப் போற்றாது ஆற்ற நாள் போக்கிய புன்மையை நினைந்து உயிர் துறந்தான்.

---

5. "சிறுகாலை யேதமக்குச் செல்வுழி வல்சி
இறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளார்—இறுகிறுகி
பின்னறிவாம் என்றிருக்கும் பேதையார் கைகாட்டும்
பொன்னும் புளிவிளங்கா யாம்" —நாலடியார். 32

## துன்பத்தை வெல்லும் படை

இன்பமும் துன்பமும் கலந்த இவ்வுலக வாழ்க்கையில், இன்பம் வரும்பொழுது மகிழ்தலும், துன்பம் வரும்பொழுது அழுதலும் மாந்தர் இயற்கை. துன்பம் அழுதால் தீராது; அதை வெல்வதற்கு ஒரு வழியுண்டு.

*"இடுக்கண் வருங்கால் நகுக அதனை*
*அடுத்து ஊர்வது அஃதொப்ப தில்"*

என்றார் வள்ளுவர். 'துன்பம் வருங்கால் மனத்துளங் கலாகாது; ஊழ்வினையை நினைந்து உழலலாகாது; தெய்வத்தைப் பழித்துத் தூற்றலாகாது. மலர்ந்த முகத்தோடு துன்பத்தை எதிர்த்தல் வேண்டும்; சிரித்து அதன் கொடுமையைச் சிதைத்தல் வேண்டும்' என்பது வள்ளுவர் காட்டும் வழி இக் கருத்தை ஏற்றுப் போற்று கின்றது சிந்தாமணி. நடுக்கடலிலே ஒரு கப்பல் சென்றுகொண்டிருந்தது. திடீரென்று மேகம் திரண்டது; இடி முழங்கிற்று; கடுங்காற்று அடித்தது; கடல் கொந்தளித்தது. மரக்கலத்தில் இருந்த மாந்தர் அஞ்சி நடுங்கினர். அப்போது வள்ளுவர் நூலைக் கற்ற வணிகன் ஒருவன் பேசலுற்றான் :

*"இடுக்கண்வந் துற்ற காலை*
*எரிகின்ற விளக்குப் போல*
*நடுக்கம்ஒன் றானும் இன்றி*
*நகுக, தாம் நக்க போழ்தவ்*
*விடுக்கணை அரியும் எஃகாம்*
*இருந்து அழுது யாவர் உய்ந்தார்"*

என்று அவ் வணிகன் வாயிலாகச் சிந்தாமணி துன்பத்தைத் துடைப்பதற்கு வழி கூறுகின்றது.

## தவத்தின் மேன்மை

வீரமும் காதலும் விரித்துரைக்கப்படும் சிந்தாமணியின் தவத்தின் மேன்மையும் வலியுறுத்தப்படுகின்றது. அருங்கலைச் செல்வனுகவும், பெரும்போர் வீரனுகவும், பெண்கள் விரும்பும் பேரழகனுகவும் விளங்கிய சீவகன், மன்னர் போற்றும் மன்னனுய் ஏமாங்கத நாட்டில் அரசு வீற்றிருந்தான். அவன் எண்ணிய பொருள்களையெல்லாம் எண்ணியவாறே எய்தியதற்கு முன்னைத் தவமே முன்னின்று உதவிற்று.

''வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்''

என்பது வள்ளுவர் வாக்கு. சுடுகாட்டிலே பிறந்து, வணிகன் மனையிலே வளர்ந்து, கலைகளையெல்லாம் உணர்ந்து, தலைசிறந்த வீரனுய்த் திகழ்ந்து, வஞ்சனையால் அரசெய்திய பகைவனைக் கொன்று வீறுபெற்ற சீவக மன்னன் முற்பிறப்பில் செய்த தவத்தை வியந்து புகழ்ந்தனர் நாட்டு மக்கள்.

''இந்நகரப் புறங்காட்டில் இவன்பிறந்த வாறும்
தன்னிகரில் வாணிகனில் தான்வளர்ந்த வாறும்
கைந்நிகரில் வேந்தர்தொழப் போந்ததுவும் கண்டால்
என்னைதவம் செய்யாது இகழ்ந்திருப்ப தென்பார்''

என்ற சிந்தாமணிச் செய்யுளில், தவத்தின் பெருமை குறிக்கப்படுகின்றது. சீவகன் எய்திய சிறப்பினைக் கண்டும், அதற்குக் காரணம் தவம் என்பதறிந்தும் நல்லறிவுடையார் தவம் செய்யாது அவமே காலங் கழிப்பரோ என்று ஊரார் வாயிலாகக் கேட்கின்றுர் சிந்தாமணிக் கவிஞர்.

இத் தகைய தவத்தின் இயல்பினைத் திருக்குறள் தெரிவிக்கின்றது :

*"உற்றநோய் நோன்றல், உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு"*

என்றார் வள்ளுவர். 'தனக்கு வரும் துன்பத்தைப் பொறுத்தல், பிறர்க்குத் துன்பம் செய்யாதிருத்தல் ஆகிய இரண்டுமே தவ ஒழுக்கத்தின் அடையாளம் என்பது அவர் கருத்து. மன்னுயிரை யெல்லாம் தன்னுயிர்போல் கருதாது, மாந்தர் செய்யும் கொடுமையைக் கண்டு வருந்திற்று வள்ளுவர் உள்ளம் :

*"தன்னுயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்"*

என்று அவர் வினவுகின்றார்; துன்பம் என்று தானறிந்த ஒன்றைப் பிறர்க்குச் செய்யா தொழிதல் சிறந்த அறம் என்று கூறுகின்றார். இக் கருத்தே சிந்தாமணியில் குன்றிலிட்ட விளக்குப்போல் நின்று ஒளிர்கின்றது :

*"தன்னுயிர் தான்பரிந்து ஓம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்
இன்னுயிர்க்கு இறைவனாய் இன்ப மூர்த்தியாய்ப்
பொன்னுயி ராய்ப்பிறந்து உயர்ந்து போகுமே"*

என்று சிந்தாமணி பாடிற்று. 'மன்னுயிரைத் தன்னுயிர் போல் பாதுகாக்கும் அறவோன், இன்னுயிர்க்கெல்லாம் இறைவனாய் இன்பநிலை எய்துவான்' என்று சிந்தாமணி கூறும் அறவுரை பொன்னேபோற் போற்றத்தக்கதாகும்.

# கம்பராமாயணத்திலே வள்ளுவர்

"தமிழ் மொழியின் கதியாகிய கவிஞர் இருவர். அவர் கம்பரும் திருவள்ளுவரும்" என்று கட்டுரைத்தார் ஒரு தமிழ்ப் பெரியார். திருவள்ளுவரைத் 'தெய்வப் புலவர்' என்றும் கம்பரைக் 'கல்வியிற் பெரியவர்' என்றும் கற்றறிந்தோர் புகழ்ந்தேத்துவர். திருவள்ளுவர் அருளிய திருக்குறளைப் பொன்னே போல் போற்றிய கவிஞர்களுள் தலை சிறந்தவர் கம்பர். திருக்குறளின் அருமையான சொற்களையும், ஆழ்ந்த பொருள்களையும் கம்பர் அள்ளியெடுத்து, தமது பெருங்காவியமாகிய இராமாயணத்தில் அமைத்து அழகு செய்துள்ளார். கம்பர் கண்கொண்டு திருக்குறளைக் காண்பது தமிழறிஞர்க்கு இணையற்ற இன்பமும் பயனும் தருவதாகும்.

## இல்லறம்

முப்பால் ஆகிய திருக்குறளின் முதற்பாலாக அமைந்தது அறத்துப்பால். இல்லறம் துறவறம் என்னும் இருவகை அறத்தின் சிறப்பையும் அறத்துப்பால் எடுத்துரைக்கின்றது. இல்லந்தோறும் நிகழ்தற்குரிய அறமே இல்லறமாகும். இவ்வறம் அறவோர்க்கும் துறவோர்க்கும் ஆதரவளிக்கும்; அற்றார்க்கும் அலந்தார்க்கும் உற்ற துணையாகும். இங்ஙனம் பல்லோர்க்கும் நலஞ் செய்தலால் இல்லறமே நல்லறம் என்று சொல்வதுண்டு.

இத் தகைய சீர்மை வாய்ந்த இல்வாழ்க்கையில் இல்லாள் எனவும், மனையாள் எனவும் விதந்துரைக்கப்

படும் பெண்களுக்குச் சிறந்த உரிமையும் கடமையும் உண்டு. வாழ்க்கைத்துணையாகக் கொண்ட கணவனை யும் வந்த விருந்தினரையும் பேணி உபசரிப்பவர் பெண்டிரே யாவர் :

> *"தற்காத்து, தற்கொண்டான் பேணித் தகைசான்ற*
> *சொற்காத்துச் சோர்விலாள் பெண்"*

என்பது வள்ளுவர் வாய்மொழி. இக் கருத்தை இராமா யணத்திலே விளக்கிக் காட்டுகின்றார் கம்பர். தனக் குவமையில்லாத் தலைவனாகிய இராமனைப்பிரிந்து இலங்கை மாநகரில் சிறையிருந்த சீதை, தன் குறையையும் தலைவன் நிலையையும் எண்ணித் தளர்கின்றாள்; "காட்டிலே தங்கி யிருக்கும் என் கணவனுக்கு உண்ணும் படியறிந்து உணவளிப்பார் யார் ?" என்று வருந்துகின் றாள் ; 'அவர் தங்கி இருக்கும் இடம் நாடி, ஆன்றோரும் முனிவரும் வருவார்களே ! அவர்களை வரவேற்று உபசரிப்பதற்குரிய மனையாள் இல்லாத நிலையில் அவர் எப்படித் தயங்குவாரோ !' என்று எண்ணி மயங்கு கின்றாள்.

> *"அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்தும் என்று அழுங்கும்*
> *விருந்து கண்டபோது என்னுறு மோஎன்று விம்மும்*
> *மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று*
> *மயங்கும்*
> *இருந்த மாநிலம் செல்லரித் திடவும் ஆண்டு எழாதாள்"*

என்று கம்பர் பாடிய கவியில் கணவனையும் விருந்தின ரையும் பேணும் கடமையுடையவள் பெண் என்ற கருத்து நன்றாக விளக்கப்படுகிறது.

## விருந்தோம்பல்

விருந்தினரைப் பேணுதல் இல்லறங்களுக் கெல்லாம் சிறந்ததென்பது திருவள்ளுவர் கொள்கை.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்று திருக்குறள் கூறுகின்றது. இவ்வாறு விதந்து சொல்லப்பட்ட விருந்தினர் என்பார் யார்? விருந்து என்ற சொல்லின் பொருள் யாது? இக் காலத்தில் மணமக்களுக்கும், உற்றார் உறவினர்க்கும், பட்டம் பதவிகள் பெற்றோர்க்கும், இவர் போன்றார்க்கும் மகிழ்ச்சியின் அறிகுறியாக அளிக்கப்படும் உபசார உண்டியே விருந்தென்று சொல்லப்படும். திருக்குறளில் விருந்து என்பதற்கு இந்தப் பொருள் இல்லை. பழங் காலத்தில் விருந்து என்ற சொல்லுக்குப் புதுமை என்பது பொருள். எனவே, விருந்தினர் என்பார் புதியவராக வருபவர். அவர் உற்றாரல்லர்; உறவின ரல்லர்; ஒருவகையிலும் தொடர்புடையரல்லர். அதிதிகள் என்று சொல்லப்படுபவர்களே விருந்தினர் ஆவர். அதிதிகளை நாள்தோறும் ஆதரித்தல் வேண்டும் என்று பணித்தார் திருவள்ளுவர்.

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று"

என்று திருக்குறள் பாடிற்று.

இவ்வாறு திருவள்ளுவர் பாராட்டிய விருந்தோம்பல் என்னும் அறம் சீராக நடைபெறுவதற்கு, இன்றியமையாத சாதனங்களை எடுத்துரைக்கின்றார் கம்பர். விருந்தினராக வருபவரைப் பேணி உபசரித் தற்குரிய பெண்களிடம் செல்வமும் கல்வியும் அமைந்

திருந்தாலன்றித் திருவள்ளுவர் வலியுறுத்திய இல்லறம் நன்ருக நடைபெறமாட்டாது என்பது கம்பர் கருத்து. விருந்தினரின் தகுதியை உணர்வதற்கும், அவர் குறிப் பறிந்து குறை தீர்ப்பதற்கும் கல்வியறிவு வேண்டும்; அவர்க்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் கொடுப்பதற்குச் செல்வம் வேண்டும். இந்தக் கருத்தைக் கோசல நாட்டு வருணனையிலே கூறுகின்ருர் கம்பர். கோசல நாட்டு மாதரெல்லாம் போதிய செல்வமும் கல்வியும் பெற்றிருந்தார்கள்; ஆதலால் வருந்தி வந்தவர் அருந்துயர் களைந்து, நாள்தோறும் விருந்தினரைப் பேணி இல்லறம் புரிந்தனர்.

"பெருந்த டங்கண்பி றைநு த லார்க்கெல்லாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்து மன்றிவி ளைவன யாவையே"

என்று பாடினர் கம்பர். செல்வமும் கல்வியும் சிறக்கப் பெற்று, ஈகையும் விருந்தும் இடையருது செய்து வந்த கோசல நாட்டுப் பெண்களை "பெருந் தடங்கண் பிறை நுதலார்" என்று போற்றினர் கவிஞர். பெரிய கண்கள் பெண்டிர்க்கு அழகு என்று புலவர்கள் புகழ்வதுண்டு. திருவள்ளுவரும் கண்ணின் பெருமையைக் கூறுகின்ருர்:

"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும்"

என்பது அவர் வாக்கு. கண்ணோட்டம் என்பது இரக்கம். 'பிறர் படும் துயரம் கண்டு இரங்கும் கண்களே கண்கள். இரக்கமற்றவர் முகத்திலுள்ளவை கண்களல்ல, புண்கள்' என்று கட்டுரைத்தார் திருவள்ளுவர்.

இக் கருத்தை மனத்திற்கொண்டு கோசல நாட்டின் பெண்களின் கண்களைப் புகழ்ந்துரைத்தார் கம்பர். அம்

மாதரின் கண்கள் கருணை வாய்ந்த கண்கள்; ஏழை முகம் பார்த்து இரங்கும் கண்கள்; பரிவுடன் விருந்தினரை எதிர்பார்த்திருக்கும் கண்கள். இத் தகைய பெருமை சான்ற கண்களைப் 'பெருந்தடங்கண்' என்று போற்றினர் கவிஞர்.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது இந் நாட்டுப் பழமொழி. முகத்தினும், கண்களில் அது நன்றாக விளங்கும் என்று மெய்ப்பாட்டியல் அறிந்தோர் கூறுவர். உள்ளத்தில் உள்ள உணர்ச்சியைக் கண்ணின் பார்வை காட்டிவிடும். விருப்பத்தைக் காட்டும் பார்வையை 'இன்னோக்கு' என்பர்; வெறுப்பைக் காட்டும் பார்வையை 'வன்னோக்கு' என்பர். இல்வாழ்க்கையில் விருந்தினரை வரவேற்கும் பெண்களிடம் இனிய பார்வையே அமைந்திருத்தல் வேண்டும் என்று திருவள்ளுவர் அருளிப் போந்தார்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

என்பது குறள். இனிய முகத்தைக் கண்டால் விருந்தாக வருபவரின் உள்ளம் தழைக்கும்; கடுமையான முகத்தைக் கண்டால் அவர் மனம் வாடி வருந்தும். ஆதலால், இல்லறம் புரியும் பெண்களிடம் இனிய பார்வை வேண்டும். விருந்தினர் தூரத்தில் வரும் பொழுது அவரை வரவேற்பது இனிய பார்வை; அண்மையில் வரும் பொழுது அவரை மகிழ்விப்பது இனிய சொல்; பின்னர் நிகழ்வது உணவளித்தல் ஆகிய இனிய செயல். இவ்வாறு விருப்பத்தின் அறிகுறியாகிய இனிய நோக்கும், அன்பிற்கு அறிகுறியாகிய இனிய சொல்லும் உடையார் செய்யும் அறமே சிறந்த தென்பது

105984
031:135:9
RAI UNIVERSITY LIBRA

திருவள்ளுவர் கொள்கை. இந்தக் கருத்தைக் கதை நிகழ்ச்சியில் வைத்து விளக்குகின்றார் கம்பர். பஞ்சவடிச் சோலையில் தன்னந் தனியளாய் இருந்த சீதையை இராவணன் கவர்ந்து, தேர்மேல் வைத்துச் செல்லும் போது, கழுகரசனாகிய சடாயு பறந்தோடி வந்து தடுத்தான். இராவணன் வலிய வேல் ஒன்றை எடுத்துச் சடாயுவின் சிறகின்மேல் வீசியெறிந்தான். வேகமாக வந்த வேல் கடுமையான சிறகிலே பட்டு முட்டித் திரும்பிற்று. அது திரும்பியதற்கு ஓர் உவமை சொல்கின்றார் கம்பர்; 'இனிய நோக்குடைய பெண்கள் இல்லாத வீட்டை நோக்கி வந்த விருந்துபோல் சடாயுவின் வன்சிறகிலே பட்டுத் திரும்பியது அவ் வேல்' என்று பாடுகின்றார். "இன்னேக்கியர் இல்வழி எய்திய நல்விருந்து போல் அது மீண்டது" என்ற கம்பர் வாசகம், "முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து" என்ற வள்ளுவர் வாய்மொழியைத் தழுவி எழுந்ததாகும்.

## பெற்றோர் இன்பம்

இல்வாழ்க்கையில் நல்ல மக்களைப் பெற்ற தாய் தந்தையர் அடையும் இன்பத்தைப்பற்றித் திருவள்ளுவரும் கம்பரும் பாடிப் போந்தனர்.

> *"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்*
> *சான்றோன் எனக்கேட்ட தாய்"*

என்பது வள்ளுவர் வாக்கு. ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து, ஓர் ஆண் மகவைப் பெற்ற நிலையில், தான் பட்ட பாடெல்லாம் மறந்து இன்பமடைவாள் தாய். அதனினும் பெரியதோர் இன்பம் அவளுக்குப் பிற்காலத்தில் உண்டு. தன் மகன் சான்றோன் என்ற சொல்லைக் கேட்கும்பொழுது

அவனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியினும் பெரு மகிழ்ச்சி அடைவாள் தாய் என்பது இக்குறளின் கருத்து. சான்றோன் என்ற சொல், சிறந்த அறிவும் நிறைந்த குணமும் வாய்ந்தவனைக் குறிக்கும். இந்தக் குறளின் விளக்கம் பெற வேண்டும் கருத்துக்களை நயமாக விளக்குகின்றார் கம்பர். கோசல நாட்டரசனாகிய தசரதன், இராமனைத் தலைமகனாகப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியையும், அவன் நிகரற்ற வீரன் என்று அறிந்தபோது அடைந்த மகிழ்ச்சியையும், பின்பு அவன் சான்றோன் என்று கேட்டபோது அடைந்த மகிழ்ச்சியையும் படிப்படியாக உணர்த்துகின்றார். நெடுங் காலம் பிள்ளைப்பேறின்றித் தசரதன் வருந்தினான்; வாழையடி வாழையென வந்த பெருங்குலம், தன்னோடு வழியடைத்துப் போனால் வசையாகுமே என்று வாடினான். இவ்வாறு கவலையுற்ற மன்னவன் இராமனைப் பெற்ற போது மனங்களித்தான் என்று சொல்லவும் வேண்டுமோ?

> *"மைந் தரை இன்மையின் வரம்பில் காலமும்*
> *நொந்தனன், இராமன் அந் நோவை நீக்குவான்*
> *வந்தனன்"*

என்று அம் மன்னனே மகிழ்ச்சியோடு கூறுகின்றான். இத்தகைய இனிய மைந்தன், படைக்கலப் பயிற்சி பெற்று, பார்த்திபர் குலத்திற்கேற்ற பண்புகள் பலவும் வாய்ந்து விளங்கினான். அவனுடைய வீரம் விளங்கு வதற்கு நல்ல வாய்ப்பொன்று கிடைத்தது. மிதிலையரசன் மாளிகையில் நெடிய வில்லொன்று இருந்தது. மலை போன்ற அந்த வில்லை எடுத்து வளைக்கவல்ல வீரனையே தன் மகளாகிய சீதை மாலையிட்டு மணம் புரிவாள் என்று மிதிலையரசன் அறிவித்திருந்தான். அந்த வில்லைக்

கண்டாரும், கண்டார் சொல்லக் கேட்டாரும் அதன் அருகே செல்லாது அகன்றனர். ஆதலால், சீதைக்குத் திருமணம் இல்லை என்று எல்லோரும் பேசினர். இந்த நிலையில் மிதிலைக்கு வந்து சேர்ந்தான் இராமன்; வில்லைக் கண்டான்; எடுத்தான்; வளைத்தான்; ஒடித்தான். இவையெல்லாம் நொடிப்பொழுதில் நிகழ்ந்துவிட்டன; மங்கைக்கு ஏற்ற மணாளன் வாய்த்தான் என்று மிதிலையரசன் மனங் களித்தான்; நிகழ்ந்த செய்தியைத் தசரதனுக்குத் தெரிவித்தான். தன் மகன் செயற்கரிய வீரச்செயல் செய்தான் என்று கேட்டபோது தசரதன் மனத்தில் மகிழ்ச்சி பொங்கிற்று. வீரத்தோள் விம்மி நிமிர்ந்தன.

மிதிலையில் திருமணம் நிகழ்ந்த பின்பு, தசரதன் மணமக்களை அயோத்திக்கு அழைத்துச் சென்றான்; செல்லும் வழியில் பரசுராமன் குறுக்கிட்டான். அவன் இருபத்தொரு தலைமுறையாக அரசர் பலரைக் கொன்று குவித்த வீரன். அவனைக் கண்டபோது தசரதன் படை நடுங்கிற்று; மன்னனும் மயக்கமுற்றான். பரசுராமன் நேராக இராமனிடம் சென்று, ‘நீ மிதிலைமா நகரில் ஒரு வில்லை ஒடித்தாய் என்று அறிந்தேன். உண்மையில் நீ வீரனாயின் இதோ! என் கையிலுள்ள வில்லை வளைத்திடு, பார்ப்போம்’ என்று வீர வசனம் பேசினான். புன்னகை பூத்த முகத்தோடு அந்த வில்லைக் கையினால் வாங்கினான் இராமன்; மிக எளிதாக அதை வளைத்து எதிரே நின்ற பரசுராமனது செருக்கை அறுத்தான்; அரசர் குலத்தைப் பற்றிநின்ற அச்சம் தீர்த்தான். இந்த அரும்பெருஞ் செயலை அறிந்த தசரதன் வீர மைந்தனைக் கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான்.

அயோத்தியை அடைந்த பின்பு தலைமகனை இராமனுக்கு முடிசூட்டித் தான் தவநெறியை மேற்கொள்ளக் கருதினன் தசரதன்; மறைமுனிவராகிய வசிட்டரும் மதிநலம் வாய்ந்த அமைச்சரும் அமர்ந்திருந்த சபையிலே தன் கருத்தைத் தெரிவித்தான். மன்னவன் நலத்தையும் மன்னுயிரின் நலத்தையும் நன்குணர்ந்த வசிட்ட முனிவன் பேசலுற்றான்: "அரசே! இனி, நீ தவஞ் செய்தல் தக்கதேயாகும். உன் மகனும் மருகியும் நல்லவர்; யாதும் குறைவின்றி இந்நாட்டைக் காத்து அரசு செய்வர்" என்று அவர் பெருமை பேசலுற்றான்:

*"மண்ணினும் நல்லள் மலர்மகள், கலைமகள், கலையூர்*
*பெண்ணினும் நல்லள், பெரும்புகழ்ச் சனகியோ நல்லள்*
*கண்ணினும் நல்லன் கற்றவர் கற்றிலா தவரும்*
*உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பார்"*

என்று பேசினன். இவ்வாறு முனிவன் பேசிய வாசகத்தைக் கேட்டான் தசரதன்; மட்டிலா மகிழ்ச்சியடைந்தான். அப்போது அவன் மனத்தில் எழுந்த மகிழ்ச்சி முந்திய மகிழ்ச்சிகளை யெல்லாம் கடந்து மேலோங்கிற்று. மகனைப் பெற்றபோது அடைந்த இன்பத்திலும், மலைபோன்ற வில்லை அவன் ஒடித்தான் என்ற செய்தியைக் கேட்டபோது அடைந்த இன்பத்திலும், பரசுராமனது செருக்கறுத்த செய்தி கேட்டபோது அடைந்த இன்பத்திலும், வசிட்ட மாமுனிவன் வாயிற் பிறந்த வாசகத்தைக் கேட்டபோது தசரதன் பெரியதோர் இன்பமுற்றான் என்று கூறுகின்றார் கம்பர்:

*"மற்றவன் சொன்ன வாசகம் கேட்டலும் மகனைப்*
*பெற்ற அன்றினும், பிஞ்ஞகன் பிடித்தஅப் பெருவில்*
*இற்ற அன்றினும், எறிமழு வாளவன் இழுக்கம்*
*உற்ற அன்றினும் பெரியதோர் உவகையன் ஆனன்"*

என்ற கம்பர் பாட்டு, திருவள்ளுவர் கருத்திற்கு அருமையான விளக்கம் தருகின்றது. தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் சாலவும் இன்புறுவாள் என்றார் திருவள்ளுவர். 'யார் சொல்லக் கேட்ட தாய் அவ்வாறு இன்புறுவாள் ? ஒரு மகனைச் சான்றோன் என்று சொல்லுதற்குரியார் யார் ?' என்ற வினாக்களுக்கு விடை தருகின்றார் கம்பர். ஒருவனைச் சான்றோன் என்று உற்றார் சொன்னால் போதாது; ஊரார் சொன்னாலும் போதாது; உலகத்தில் சான்றோன் என்று புகழ் பெற்ற ஒருவனே மற்றொருவனைச் சான்றோன் என்று சொல்லுதற்கு உரியவன். இராமனைச் சான்றோன் என்று தன் வாயாற் கூறினான், சான்றாண்மையின் சிகரமாக விளங்கிய முனிவன். அவன் வாய்மொழியைக் கேட்ட போது தசரதன் எல்லையற்ற இன்பமுற்றான்.

தாய் தந்தையர் இருவருக்கும் இத்தகைய இன்பம் உண்டு என்பதை இரு பெருங் கவிஞரும் எடுத்துக் காட்டுகின்றார்கள். தாய் பெறும் இன்பத்தைக் கூறினார் திருவள்ளுவர். தந்தை பெறும் இன்பத்தைக் கூறினார் கம்பர். தம் மக்களின் சிறப்பைத் தாமாக அறிந்து பெறும் மகிழ்ச்சியினும் தக்கோர் வாயிலாகக் கேட்கும்போது அடையும் மகிழ்ச்சி சாலவும் பெரிது என்னும் உண்மையைத் திருவள்ளுவர் குறளாலும், கம்பர் தரும் விளக்கத்தாலும் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம்.

## நல்லமைச்சர் தன்மை

திருக்குறளிலே அரசியலைப் பற்றிய அருமையான கருத்துக்கள் பலவுண்டு. அவற்றைப் பொருட்பால் என்னும் பகுதியிலே கூறுகின்றார் திருவள்ளுவர். அரசு எத் தன்மையதாயினும், அமைச்சர் சபை

அரசாங்கத்தின் இன்றியமையாத அங்கமாகும். அமைச்சர் தக்கவராக அமைந்தால் நாட்டுக்கு மிக்க நன்மையுண்டு. ஆதலால், அமைச்சருக்குரிய குணநலங்களைத் திருக்குறள் எடுத்துரைக்கின்றது. மதிநலம் வாய்ந்தவர்களாய், நெறி முறை வழுவாதவர்களாய், சுயநலம் அற்றவர்களாய், சொல் வன்மை பெற்றவர்களாய் உள்ளவரே, அமைச்சராதற்கு உரியவர் என்பது திருவள்ளுவர் கருத்து.

இத் தகைய அமைச்சர், அரசன் தவறு செய்யத் தலைப்பட்டால் தடுத்துச் சொல்லத் தயங்குவதில்லை. அவனுடைய கோபத்திற்கு அஞ்சி வாய் அடங்கி வாளா இருப்பதில்லை. இந்த உண்மையை,

*"அறிகொன்று அறியான் எனினும் உறுதி*
*உழையிருந்தான் கூறல் கடன்"*

என்ற திருக்குறள் பாடிற்று.

இத் தன்மை வாய்ந்த அமைச்சர்கள், கோசல நாட்டையாண்ட தசரதனுடைய சபையிலே இருந்தார்கள் என்று கூறுகின்றார் கம்பர் :

*"தம்முயிர்க்கு உறுதி எண்ணார்*
*தலைமகன் வெகுண்ட போதும்*
*வெம்மையைத் தாங்கி நீதி*
*விடாதுநின்று உரைக்கும் வீரர்*
*செம்மையின் திறம்பல் சொல்லாத்*
*தேற்றத்தார், தெரியும் காலம்*
*மும்மையும் உணர வல்லார்*
*ஒருமையே மொழியும் நீரார்"*

என்று அந் நாட்டு அமைச்சர்களைப் பாராட்டுகின்றார் கவிஞர். அரசன் மனத்திற் கொண்ட கருத்திற்கு மாறாகப் பேசினால், அவன் சீறுவானே என்று அவர்கள்

சிந்திக்கமாட்டார்கள்; அரசன் கோபத்திற்கு ஆளானால் ஆபத்து விளையுமே என்று சிறிதும் அஞ்சமாட்டார்கள்; போர்க்களத்தில் பின்வாங்காமல் நின்று போராடும் வீரரைப்போல், அரசனது அவைக்களத்தில் மனத் திண்மையோடு நீதி முறையை அஞ்சாது எடுத்துரைப் பார்கள்; உண்மையை ஒரு போதும் மறைக்கமாட்டார் கள், மழுப்பமாட்டார்கள்; சொன்ன சொற்களை மாற்ற மாட்டார்கள்; இத் தன்மை வாய்ந்த அமைச்சர்களால் கோசல நாட்டுக்கும் அரசாங்கத்திற்கும் கிடைத்த நன்மைகளைத் தசரத மன்னனே மனமாரப் போற்றி னான்.

"உம்மையான் உடைமையின் உலகம்யாவையும்
செம்மையின் ஓம்பிநல் லறமும் செய்தனன்"

என்று மந்திரிகளை நோக்கி அம்மன்னன் கூறினான். நாடாளும் பொறுப்புடைய அரசர்கள், மந்திரிகள் சொல்லும் மாறுபட்ட கருத்துக்களைச் செவியினால் ஏற்று, அறிவினால் ஆராய்ந்து பார்க்கும் பண்பினராய் இருத்தல் வேண்டும் என்று கூறுகின்றார் திருவள்ளுவர் :

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு"

என்பது திருக்குறள். அத்தகைய பண்பு வாய்ந்த அரசன் தசரதன்.

இலங்கையில் அரசு புரிந்த இராவணன் இதற்கு நேர் மாறான தன்மை வாய்ந்தவன். மாறுபட்ட கருத்தை அவன் மதிப்பவனல்லன். தவறான நெறி யிலே அவன் முனைந்தால், தடுத்துச் சொல்லும் அமைச்சர்கள் அந்நாட்டில் இல்லை. அடிமையுள்ளம் வாய்ந்தவர்களே இராவணன் சபையில் அமைச்சர்களா

யிருந்தார்கள். இந்த உண்மையைச் சீதையின் வாயி லாக உணர்த்துகின்றார் கம்பர் :

"கடிக்கும்வல் லரவும் கேட்கும்
மந்திரம் களிக்கின் றோயை
அடுக்குமீ தடாதென் றுஆன்ற
ஏதுவோடு அறிவு காட்டி
இடிக்குநர் இல்லை; உள்ளார்
எண்ணிய தெண்ணி உன்னை
முடிக்குநர் என்ற போது
முடிவன்றி முடிவ துண்டோ"

என்ற சீற்றத்தோடு பேசுகிறாள் சீதை. "நஞ்சுடைய கொடிய நாகமும் மந்திர ஆணையில் அடங்குமே! நெஞ்சில் கொடுமையுள்ள உன்னை நெறிப்படுத்தவல்ல அமைச்சர்கள் இந்நாட்டில் இல்லையே! மதுவை மாந்தி மயங்கித் திரிகின்றாய் நீ! செய்யத் தக்கது இது, செய்யத் தகாதது இது என்று ஆராய்ந்து, உனக்கு அறிவுறுத்துவார் எவரும் இல்லை. நீ செய்யும் செயல் தவறு என்று உன் செவியில் இடித்துரைப்பார் யாரும் இல்லை; இந்த நாட்டில் அமைச்சர் என்று பெயர் படைத்தவர்கள், நீ எண்ணியபடியே எண்ணும் அடிமை யுள்ளம் உடையவர்கள். அன்னாரை அமைச்சர்களாகக் கொண்ட உனக்கு அழிவு வரும் என்பதில் ஐயம் உண்டோ?" என்று அஞ்சாது உரைத்தாள் சீதை.

இவ்வாறு கம்பர் பாடிய கவி, திருவள்ளுவரின் கருத்தைத் தழுவி எழுந்ததாகும். எப்பொழுதும் இச் சகமே பேசும் கொச்சை அமைச்சர்களால் பயனில்லை. அரசனைத் தீய நெறியினின்றும் விலக்கி, நன்னெறி யிலே செலுத்தும் அமைச்சர்களே நாட்டிற்குத் தேவை. தவறு கண்டவிடத்து, அரசன் என்று அஞ்சாது,

தலைவன் என்று தயங்காது இடித்துரைக்கும் ஆற்றலுடையாரே நல்லமைச்சர். அன்னாரைத் துணைக் கொண்ட அரசனுக்குக் கேடில்லை என்றுரைத்தார் திருவள்ளுவர் :

*"இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே*
*கெடுக்கும் தகைமை யவர்"*

என்பது வள்ளுவர் வாக்கு. இவ்வாறு இடித்துச் சொல்லும் அமைச்சர் இல்லாத அரசாங்கம் நிலை குலைந்து அழியும். பாகன் இல்லாத யானை போல் அரசன் நெறியல்லா நெறிச்சென்று கெட்டு ஒழிவான் என்று திருக்குறள் மேலும் இக்கருத்தை வலியுறுத்துகின்றது :

*"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்*
*கெடுப்பார் இலானும் கெடும்"*

என்று அழுத்தமாகக் கூறினர் திருவள்ளுவர். இவ்வாறு அறிவுறுத்தப்பட்ட அரசியல் உண்மைக்கு ஒரு சான்றாக நின்றது இலங்கை அரசு. அமைச்சர் சபையில் வல்லரசனான இராவணனைத் தடுத்துச் சொல்ல வல்லாரும் இல்லை. இடித்துச் சொல்ல வல்லாரும் இல்லை. ஆதலால், இலங்கை அரசு வீழ்ந்து ஒழிந்தது.

## நட்பின் திறம்

இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் இடித்துச் சொல்லும் நண்பர்கள் வேண்டும். எப்போதும் இங்கிதம் பேசுபவன் நண்பனல்லன்.

*"நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக்கண்*
*மேற்சென்று இடித்தற் பொருட்டு"*

என்றார் திருவள்ளுவர். இவ்வாறு நலம் புரிதலாலேயே தோழமை இன்றியமையாதது என்று ஆன்றோர் கூறிப் போந்தார். தோழமையின் இயல்பினைத் திருக்குறள் தெளிவாக எடுத்துரைக்கின்றது. ஒருவரோடு ஒருவர் தோழமை கொள்வதற்கு இருவரும் ஒரு நாட்டினராய் இருக்க வேண்டுவதில்லை; ஒருவரையொருவர் பலகால் கண்டும் பேசியும் பழக வேண்டுவதில்லை. ஒத்த உணர்ச்சிதான் வேண்டும். ஒத்த உணர்ச்சியுள்ளவர்கள் வேறு வேறு நாட்டினராயினும் வேறு வேறு இனத்தின ராயினும், உயரிய தோழர் ஆவார்கள். இக் கருத்து,

> "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
> நட்பாம் கிழமை தரும்"

என்ற திருக்குறளால் உணர்த்தப்படுகின்றது. கம்ப ராமாயணம் இக் கருத்தை நன்கு விளக்குவதாகும். இராமன், நாடு துறந்து காடு நோக்கிச் செல்லும் பொழுது, கங்கைக் கரையிலே குகனைக் கண்டான். மாசற்ற மனமுடையார் இருவரும் சிறந்த தோழர் ஆயினர். இருவரும் அதற்கு முன்பு ஒருவரை ஒருவர் கண்டவரல்லர். ஆயினும், ஒத்த உணர்ச்சியுடைய இருவரும் ஒன்றுபட்டனர். வேடர் குலத்திலே பிறந்து, கங்கையாற்றிலே ஓடம் செலுத்திய குகனைத் தன் உடன் பிறந்தவருள் ஒருவனாகக் கொண்டான் இராமன்.

இவ்வாறே, ஒத்த உணர்ச்சியால் ஒன்றுபட்டுத் தோழரானவர் சுக்கிரீவனும் விபீஷணனும். இவ்விரு வரும் பல வேறுபாடு உடையவர்கள். ஒருவன் கிஷ்கிந்தையைச் சேர்ந்தவன்; மற்றவன் இலங்கையைச் சேர்ந்தவன். ஒருவன் வானர குலத்தில் பிறந்தவன்; மற்றவன் அரக்கர் குலத்தில் பிறந்தவன். ஒருவன்

நிறம் வெள்ளை; மற்றவன் நிறம் கருமை. இவ்வளவு வேற்றுமை இருப்பினும், இருவரும் கண்ட நிலையிலே தோழமை கொண்டனர். அத் தோழமையின் சீர்மையை உணர்த்தப் போந்த கம்பர், திருவள்ளுவர் குறளிலமைந்த அருமையான சொல்லை எடுத்தமைத்து அதற்கு விளக்கமும் தருகின்றார் :

"தொல்லருங் கால மெல்லாம்
பழகினும் தூய ரல்லார்
புல்லலர் உள்ளம் தூயார்
பொருந்துவர் எதிர்ந்த ஞான்றே
ஒல்லைவந்து உணர்வும் ஒன்ற
இருவரும் ஒருநாள் உற்ற
எல்லியும் பகலும் போலத்
தழுவினர் எழுவிற் றோளார்"

என்று பாடினார் கம்பர். தேசத்தாலும் குலத்தாலும் நிறத்தாலும் வேறுபட்ட சுக்கிரீவனும், விபீஷணனும் உள்ளங்கலந்து ஒருவரையொருவர் தழுவிய கோலம், பகலொளியும் காரிருளும் கலந்த காட்சியை ஒத்தது என்று கூறினார் கம்பர். இவ்விருவரது வரலாற்றாலும் ஒத்த உணர்ச்சி ஏற்படும் முறை ஒருவாறு விளங்கு கின்றது. வானர நாட்டிலிருந்து வாலியால் துரத்தப் பட்டவன் சுக்கிரீவன்; இலங்கையிலிருந்து இராவணனால் வெளியேற்றப் பட்டவன் விபீஷணன். இருவரும் உடன் பிறந்தவர்; கொடுமையை நன்றாக உணர்ந்தவர்; அக் கொடுமைக்குத் தப்பி நன்னெறியை நாடியவர்; அறத்தை நிலை நிறுத்தும் ஆற்றலுடையவன் இராமன் என்றறிந்து, அவனைச் சரணம் அடைந்தவர். ஆகவே, பிறந்த இடத்தில் விளைந்த தீமையாலும், அடைக்கலம் புகுந்த

இடத்தில் பெற்ற நன்மையாலும் இருவரும் ஒத்த உணர்ச்சியுற்றார் என்பது தெளிவாக விளங்குகின்றது.

## கண்ணும் காதலும்

தமிழ்ப் பெருங் காவியமாகிய கம்பராமாயணத்தில் இன்பச் சுவை நிரம்பியது சீதா கல்யாணம். சீதையின் திருமணம், ஒரு காதல் திருமணமாகச் சித்திரிக்கப்படுகின்றது. திருக்குறளிலே கூறப்படும் காதல் நெறியை விளக்குகின்றார் கம்பர். மணப்பருவமுற்ற ஆணும் பெண்ணும் ஒருவரை யொருவர் தனிமையிற் கண்டு கொள்ளும் இயற்கை முறையை எடுத்துரைக்கின்றது திருக்குறள் :

> "கண்ணொடு கண்ணிணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்
> என்ன பயனும் இல"

என்பது வள்ளுவர் வாக்கு. காதலர் கண்கள் இசைந்து விட்டால் அவர்கள் வாயினால் பேச வேண்டுவதில்லை என்பது இக் குறளின் கருத்து. இந்தக் கருத்தை விவரித்துரைக்கின்றார் கம்பர்.

மிதிலை மாநகரில், மங்கைப் பருவமுற்ற சீதை, ஒரு மாளிகையில் வாழ்ந்தாள். ஒரு நாள் மாலைப் பொழுது மாளிகையின் மேடையிலே நின்று, இயற்கையின் அழகைக் கண்டு இன்புற்றாள் சீதை. மெல்லிய பூங்காற்று வீசிக்கொண்டிருந்தது. அன்னங்கள் விளையாடிக்கொண்டிருந்தன. அப் பொழுது அந்த மாளிகை வீதியின் வழியாக விசுவாமித்திர முனிவரோடும், தம்பியாகிய இலக்குவனோடும் இராமன் நடந்து சென்றான். மாளிகையின் அருகே வரும் பொழுது தற்செயலாக மேடையிலே நின்ற சீதையை

நோக்கினன் இராமன். அம்மங்கையும் எதிர் நோக்கினள். இருவர் கண்ணும் கலந்தன. காதல் பிறந்தது. இக் காதற் காட்சியை எழுதிக் காட்டு கின்றார் கம்பர் :

*"எண்ணரு நலத்தினள் இனையள் நின்றுழி*
*கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்று*
*உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட*
*அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள்"*

என்ற பாட்டிலே காதலர் கண்களைக் காணலாம்.

இருவர் கண் நோக்கும் ஒத்தன. இன்பம் அவருள்ளத்திற் பொங்கிற்று. காதல் என்னும் பாசம் இராமனை இழுத்துச் சீதையின் இதயத்தில் சேர்த்தது; சீதையை ஈர்த்து இராமன் இதயத்தில் வைத்தது. இவ்வாறு, ஒருவர் உள்ளத்தில் ஒருவர் புகுந்த தன்மையைப் பாடினார் கம்பர் :

*"பருகிய நோக்கெனும் பாசத் தால்பிணித்து*
*ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்*
*வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்*
*இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்"*

என்று காதலின் செய்கையை உணர்த்தினார் கம்பர். இவ்வாறு காதலுற்ற இருவரும் தாம் கண்ட இன்பக் காட்சியை உள்ளத்தில் அழகொழுக எழுதி மகிழ்ந்து மயங்குகின்றார்கள். மையல் நோயால் நையலுற்ற சீதை, தன் உள்ளங் கவர்ந்த கள்வனை மனக் கண்ணால் கண்டு உருகுகின்றாள். "வீதிவாய்ச் சென்ற காதலன், கண்வழி நுழையும் ஓர் கள்வனே?" என்று ஆசையுற்றுப் பேசுகின்றாள். அவனுடைய அங்க நலங்களையெல்லாம் எண்ணி எண்ணி இன்பமும் துன்பமும் ஒருங்கே அடை

கின்றாள். சீதையின் நிலை இவ்வாறாக, காதலனாகிய இராமன் அடைந்த மனத் துயரையும் வருணிக்கின்றார் கம்பர். மாளிகையிற் கண்ட மங்கையின் உருவம் அவன் கண்ணையும் கருத்தையும் முற்றும் கவர்ந்து கொள்கின்றது. அவளையன்றி மற்றொரு பொருளை நினைக்க அவனால் முடியவில்லை. எங்கும் அவள் பொன் மேனியே காட்சியளிக்கின்றது. இவை யெல்லாம் காதலின் கோலம் என்று காட்டுகின்றார் கம்பர்.

காதல் மணம் புரிந்து இன்புற்றிருக்கும் கணவனும் மனைவியும் எப்பொழுதும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் இருக்கவே ஆசைப்படுவர். பிரிவு என்பது காதலர்க்குப் பெருந் துன்பம் விளைக்கும்; தீயினாற் சுட்டாற் போன்ற வேதனை உண்டாக்கும். ஆயினும், காதலனாகிய கணவன், வீட்டைவிட்டுப் பிரியாமல் இருக்க முடியுமா? இன்ப வாழ்க்கை நடத்துவதற்குப் பொருள் இன்றியமையாத தன்றோ? இல்வாழ்க்கையில் இருந்து இல்லறம் ஆகிய நல்லறம் புரிவதற்குப் பொருள் அவசியமன்றோ? அத் தகைய பொருளைத் தேடிக் கொணர்வதற்காகக் கணவன், மனைவியைப் பிரிந்துதானே ஆக வேண்டும்? 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்று ஆன்றோர் கூறியபடி கடல்கடந்து பிற நாடுகளுக்குச் சென்று பெரும் பொருள் ஈட்டுதலும் நன்றே யன்றோ! ஆண்மையுள்ள கணவன்—வீரனாகிய காதலன்—தன் நாட்டில் போர் நிகழும் பொழுது வீட்டில் இருக்க முடியுமா? இருக்கக் கூடுமா? எத்தனை நாள், எத்தனை மாதம், எத்தனை ஆண்டு போர் நடந்தாலும் அத்தனை நாளும், அத்தனை மாதமும், அத்தனை ஆண்டும் ஆடவன், காதல்

மனைவியை விட்டுப் பிரிந்திருக்க நேருமன்றோ ? காதலன் பிரிந்து சென்றதும் காதலி படும் வேதனையைத் திருக்குறள் எடுத்துரைக்கின்றது. கணவனைப் பிரிந்த ஒரு காதலி தன் ஆற்றாமையைத் தோழியிடம் எடுத்துரைக்கும் முறையில் அமைந்தது குறள்.

"தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ"

என்று பேசினாள் ஒரு காதலி. "கண்ணனைய என் தோழி ! காதலன் நோய் தீயை ஒத்தது என்று சொல்கின்றார்களே ! தீயைப் போன்றதுதானா காதல் ? என் கணவன் என்னைவிட்டுப் பிரிந்த நேரமுதல் நான் படுகின்ற வேதனைக்கு ஓர் அளவில்லையே? ஒருவர் தொட்டால்தானே நெருப்புச் சுடும் ? விட்டால் சுடமாட்டாதே ! காதல் நோய், என் கணவன் என்னை விட்டுப் பிரிந்தபோது என்னைச் சுட்டு எரிக்கின்றதே! தீயினும் கொடிதன்றோ காதல்" என்று கேட்கின்றாள்.

இக் கருத்தைக் கதைப் போக்கிலே அமைத்துக் காட்டுகின்றார் கம்பர். அரசாளப் பிறந்த இராமன் நாட்டை விட்டகன்று, பதினாலாண்டு வனவாசம் செய்தல் வேண்டும் என்ற ஆணை பிறந்தது. அந்த ஆணையை அகமும் முகமும் மலர்ந்து ஏற்றுக் கொண்டான் இராமன். தன் காதலியாகிய சீதையிடம் விடைபெற்றுச் செல்லும் நோக்கத்துடன் அவள் மாளிகைக்குச் சென்றான்; நிகழ்ந்த செய்தியை நிதானமாக அறிவித்தான்; "என் தம்பி பரதன் இந் நாட்டை அரசாள்வான்; நான் சில காலம் கானகம் சென்று வருகின்றேன். அதுவரை நீ வருந்தாமல் இங்கே இரு' என்று கூறினான். காதலன் சொல்லிய சொல்,

சீதையின் செவிகளைச் சுட்டது; அவள் நெஞ்சை அறுத்தது. தன் நாயகன் முடிசூடி அரசாளும் பதவியை இழந்துவிட்டானே என்று அவள் வருந்த வில்லை; வனவாசம் செய்யப் போகின்றானே என்றும் வருந்த வில்லை. 'நீ இங்கேயே இரு; நான் உன்னை விட்டுப் பிரிந்து போகிறேன்' என்று அவன் சொல்லிய கொடுமை யான சொல்லைக் கேட்டபோது அவள் நெஞ்சம் துடித்தது; அருந்துயர் உற்று அழுது தேம்பினாள்.

சீதையின் கருத்தை அறிந்தான் இராமன்; மெல்லியல் வாய்ந்த காதலி, கானகத்தின் கடுமையையும் வெம்மையையும் அறியாது பேசுகின்றாள் என்று கருதினான்; 'அரண்மனையில் வாழ்ந்த மங்கைக்கு ஆரண்யத்தின் தன்மை எப்படித் தெரியும்? ஆதலால், அதை எடுத்துச் சொன்னால் அவள் தடுத்து ஒன்றும் பேச மாட்டாள்' என்று எண்ணினான்; கண்ணீர் வடித்து நின்ற காதலியை நோக்கி, "அந்தோ! நீ காட்டின் கடுமையைத் தெரியாது பேசுகின்றாய்; கல்லும் முள்ளும் நிறைந்தது கானகம். கடுமையான வெப்பம் உடையது கானகம். அங்குள்ள வெப்பத்தை உன்னால் தாங்க முடியாது" என்றான். அது கேட்ட சீதை "ஐயனே, நின் பிரிவினும் சுடுமோ அப் பெருங்காடு?" என்று வினவினாள்.

"பரிவி கந்தம னத்தொடு பற்றிலாது
ஒருவு கின்றனை, ஊழி அருக்கனும்
எரியும் என்பது யாண்டையது, ஈண்டுநின்
பிரிவி னும்சுடு மோபெருங் காடு"

என்றாள். "என் ஐயனே, கானகத்தில் வெயில் சுடும் என்று கூறுகின்றாயே, அது உடலைத்தானே சுடும்? நீ என்னைப் பிரிந்து சென்றால், பிரிவுத் துன்பம் என்

உள்ளத்தைச் சுட்டெரிக்குமே! நின் பிரிவினும் சுடுமோ அப் பெருங் காடு'' என்று உணர்ச்சியோடு பேசினுள் சீதை. அதற்கு மறுமொழி சொல்ல வகையறியாது கண்ணீர் சுரந்த கண்களோடு நின்றுன் இராமன் என்று கம்பர் கூறுகின்றுர். காதலர் பிரிவு எரியினும் கொடிது என்று திருக்குறள் கூறிய கருத்தைக் கம்பர் இவ்வாறு விரித்துரைத்து விளக்கிப் போந்தார்.

கணவன் பின்னே கானகம் போந்த சீதையைப் பஞ்சவடிச் சாலையில் வஞ்சவேடம் புனைந்து வந்த இராவணன் கவர்ந்து இலங்கையில் சிறை வைத்தான். ''பஞ்செனச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரித்த பாவி'' என்று கூறினுன், இராவணன் தம்பியாகிய விபீஷணன். சிறையிருந்த சீதை சிந்தை நொந்து அழுதாள். ஒரு நாள் அவள் வடித்த கண்ணீரைக் கண்டு இரக்கமற்ற அரக்கியரும் தளர்ந்து அழுது விட்டார்கள். இங்ஙனம் எளியவளாகிய சீதை அல்லற் பட்டு ஆற்ருது அழுத கண்ணீர் அரும்படை யாயிற்று. வல்லரசனை இராவணனை மாய்த்தது; அரக்கர் குலத்தையும் வேரறுத்தது. திருவள்ளுவர் எடுத்துரைத்த கண்ணீரின் ஆற்றலைத் திறம்பட விளக்கிக் காட்டும் காவியம் கம்பராமாயணம்.

# பாரதியார் கவிதையிலே வள்ளுவர்

இருபதாம் நூற்றுண்டின் தமிழ் மொழிக்குப் புத்துயிர் அளித்த கவிஞர் பாரதியார். தன்னரசிழந்து தயங்கிச் சோர்ந்து கிடந்த தமிழ் நாட்டைக் கவிதையால் தட்டி எழுப்பிய பெருமை அவருக்கே உரியதாகும். தென்னுட்டிலே தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்க வேண்டும். எந்நாட்டிலும் தேமதுரத் தமிழோசை பரவவேண்டும் என்பது அவர் ஆசை. தமிழ் நாட்டின் அருந்தவப் புதல்வராகிய திருவள்ளுவரை அவர் வாயாரப் புகழ்ந்து வாழ்த்தினுர். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று தலை நிமிர்ந்து பாடினுர். உலகத்தார்க்கெல்லாம் ஒளி நெறி காட்டிய அப் புலவர் பெருமானைத் 'தெய்வ வள்ளுவன்' என்று துதித்தார். அவர் சொல்லின் அழகும், பொருளின் ஆழமும் எல்லார்க்கும் பயன்படும் வண்ணம் பழகு தமிழிலே பாட்டிசைத்தார்.

## கண்ணீரும் காவியமும்

பாரத நாடும் அதன் அங்கமாகிய தமிழ்நாடும் பண்புற்று ஓங்க வேண்டுமாயின் அன்னியர் ஆதிக்கம் ஒழிய வேண்டும் என்பது பாரதியாரின் அடிப்படையான கருத்து. அவர் காலத்தில் அந் நோக்கங் கொண்டு உழைத்த அரும் பெருந் தலைவர்கள் அன்னிய அரசாங் கத்தின் சீற்றத்திற்கு ஆளாயினர். குடிகள் அஞ்சி ஒடுங்கினர்; அலறி அழுதனர்.

ஏழையர் வடிக்கும் கண்ணீரின் ஆற்றலைத் திருவள்ளுவர் திண்ணமாகக் கூறிப் போந்தார். செந்தமிழ்க் காவியங்களும் அதற்குச் சான்று பகரும். கண்ணகியின் கண்ணீர் பாண்டியனைக் கொன்றது; மதுரையை எரித்தது. சீதையின் கண்ணீர் இராவணனை அழித்தது; அரக்கரை வேரறுத்தது. இளங்கோவும் கம்பரும் இவற்றை இறவாத செஞ்சொற் கவிதையால் விரித்துரைத்தனர்.

"பாஞ்சாலி சபதம்" என்னும் பாட்டிலே பாரதியாரும் இவ்வுண்மையை விளக்கிப் போந்தார். அறநெறி தவறிய துரியோதனன் செய்த கொடுமைக்கு ஆற்ருது பாஞ்சாலி பதறிக் கண்ணீர்விட்டு அழுதாள்.

*"பேரழகு கொண்ட பெருந்தவத்து நாயகியைச்*
*சீரழியக் கூந்தல் சிதையக் கவர்ந்துபோய்*
*கேடுற்ற மன்னரறம் கெட்ட சபைதனிலே*
*கூடுதலும் அங்கே போய்க் 'கோ' என்று அலறினள்"*

தருமன் தலை குனிந்து நின்ருன்; கரை கடவாக் கடல் போல் வீமனும் விசயனும் அடங்கி நின்ருர். காக்கும் கடமையுடைய ஐவரும் செயலற்று நின்ற நிலையினைக் கண்ட பாஞ்சாலி, பெண்மையின் பெயரால் அச்சபையை நோக்கி முறையிட்டாள்.

*"பெண்டிர் தமையுடையீர்! பெண்களுடன் பிறந்தீர்!*
*பெண்பாவம் அன்ருே? பெரியவசை கொள்வீரோ?*
*கண்பார்க்க வேண்டும்என்று கையெடுத்துக்*
*[கும்பிட்டாள்."*

அவள் வடித்த கண்ணீரைக் கண்டும், துரியோதனனைத் தடுப்பார் யாரும் அங்கில்லை. அந் நிலையில் 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை' என்று உணர்ந்தாள் பாஞ்சாலி.

"துக்கங்கள் அழித்திடுவாய்—கண்ணா
தொண்டர் கண்ணீர்களைத் துடைத்திடுவாய்
... ... ... ....
நம்பிநின் அடிதொழுதேன் —என்னை
நாண் அழியா திங்கு காத்தருள்வாய்"

என்று வேண்டினாள். அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் செய்யும் இறைவன் அவள் மானத்தைக் காத்தான். அன்று அம் மங்கை வடித்த கண்ணீர் துரியோதனன் குலத்தை வேரறுக்கும் படைக்கலமாயிற்று என்று 'பாஞ்சாலி சபதம்' பகர்கின்றது.

## கரும்புத் தோட்டத்திலே கண்ணீர்

வறுமையின் கொடுமையால் பிறநாட்டில் பிழைக்கச் செல்லும் இந்திய மாதர் படும் துயரத்தையும் உருக்கமாகப் பாடினார் பாரதியார். கடல் சூழ்ந்த நாடுகளில் கூலி வேலை செய்து பிழைக்கச் செல்லும் இந்திய மாதர்கள், மனம் நொந்து வடிக்கும் கண்ணீரை ஒரு பாட்டிலே எழுதிக் காட்டினார்.

"பெண் என்று சொல்லிடிலோ—ஒரு
பேயும் இரங்கும் என்பார் தெய்வமே—நினது
எண்ணம் இரங்காதோ—அந்த
ஏழைகள் அங்குச் சொரியும் கண்ணீர் வெறும்
மண்ணிற் கலந்திடுமோ—அதற்கு
மாகடலுக்கு நடுவினிலே அங்கோர்
கண்ணற்ற தீவினிலே—தனிக்
காட்டினில் பெண்கள் புழுங்குகின்றார்
-அந்தக் கரும்புத் தோட்டத்திலே"

'ஐயோ! தெய்வமே! அப் பெண்களின் துயரத்தை நீ அறியாயோ? கடும் பாடுபட்டுக் கை சோர்ந்து மெய் சோர்ந்து கசங்குகின்றார்களே! மானங்

குலைந்து மயங்குகின்றார்களே! தஞ்ச மின்றித் தவிக்கின்றார்களே! அன்னார் வடிக்கும் கண்ணீர் வெறும் மண்ணில் விழுந்து மறைந்திடுமோ? கரும்புத் தோட்டத்தை ஆளும் கண்ணற்ற அன்னியரின் செல்வத்தை அறுத்திடாதோ?" என்ற கருத்து அப் பாட்டிலே விளங்குகின்றது.

## நல்லோர் வடித்த கண்ணீர்

பாரத நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தேச பக்தர்களின் கண்ணீரையும் பாரதியார் கவிதையிலே காணலாம். சுதந்தரப் பயிரைக் கண்ணீர் விட்டு வளர்த்தனர், அப் பெரியோர். "சர்வேசா! இப் பயிரைக் கண்ணீராற் காத்தோம்; கருகத் திருவுளமோ" என்று முறையிட்டார் கவிஞர்.

*"மேலோர்கள் வெஞ்சிறையில்*
*வீழ்ந்து கிடப்பதுவும்*
*நூலோர்கள் செக்கடியில்*
*நோவதுவும் காண்கிலையோ"*

என்று எல்லாமறிய வல்ல இறைவனிடம் விண்ணப்பித்தார் பாரதியார். 'நொந்தார்க்கு நீயன்றி நோவழிப்பார் யார் உளரே' என்று திருவருளை வேண்டி நின்றார். அன்று சிறையிலிருந்த சீலர் வடித்த கண்ணீர் இன்று ஆங்கில வல்லரசின் ஆதிக்கத்தை அறுத்தது; பாரத நாட்டிற்கு விடுதலை அளித்தது.

## வல்லரசும் நல்லரசும்

நல்லரசின் செம்மையையும் வல்லரசின் கொடுமையையும் விரித்துக் கூறுகின்றது திருக்குறள். அன்பினால் அரசாள்வது நல்லரசு. அச்சுறுத்தி அரசாள்வது வல்லரசு.

"கூழும் குடியும் ஒருங்கிழக்கும் ; கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு"

என்றார் வள்ளுவர். மேலை நாட்டில் கொடுங் கோலரசன் ஒருவன் செய்த ஆட்சியையும், அவன் கூழும் குடியும் ஒருங்கிழந்து வீழ்ந்த காட்சியையும் விளக்கிக் கூறுகின்றார் பாரதியார். ரஷியா தேசத்தில் இரணியன் போல் அரசாண்டான் ஜார் என்னும் கொடுங்கோலன். நல்லோரும் சான்றோரும் நடுங்கி ஒடுங்கினர் ; பொய்யரும் தீயரும் செழித்து ஓங்கினர். பேச்சுரிமையற்ற அந் நாட்டில் 'இம் மென்றால் சிறைவாசம்; ஏன் என்றால் வனவாசம்.' இத்தகைய வல்லரசுக்கு அழிவு வந்தது. இமயமலை கவிழ்ந்தது போல் விழுந்து ஒழிந்தான் ஜார் அரசன்; அன்றே முடியரசு ஒழிந்தது; குடியரசு எழுந்தது என்று பாரதியார் பாடும் கவிதையில் வல்லரசு நில்லாது என்னும் திருவள்ளுவர் கருத்து வலியுறுத்தப் படுகின்றது.

## விடுதலை ! விடுதலை !

பாரதநாடு அன்னியர் ஆட்சியினின்று விடுதலை பெறவேண்டும் என்னும் விழுமிய ஆசையால் வீரப் பாட்டிசைத்தார் பாரதியார். விடுதலை வெள்ளம் பாரத சமுதாயத்திற் பரந்து பாய்ந்து பல துறைகளிலும் இன்பம் பயத்தல் வேண்டும் என்பது அவருடைய ஆர்வம். சாதிக் கொடுமை ஒழிய வேண்டும்; கண்மூடிப் பழக்கங்கள் கழிய வேண்டும் என்று அவர் ஆசைப் பட்டார்.[1] திருவள்ளுவர் கருத்தை ஆதரவாகக் கொண்டு அவர் பாடிய கவிதை தமிழ் நாட்டுக்குப் புத்துயிர் அளித்து வருகின்றது.

1. பாரதி நூல்கள், கட்டுரைகள் Vol. III ப. 581

## சாதி வேற்றுமை

இவ்வுலகில் வாழும் மாந்தர் அனைவரும் ஒரு குலம் என்பது திருக்குறளின் அடிப்படையான கருத்துக்களுள் ஒன்று.

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்"*

என்ற முப்பாலின் கருத்து எப்பாலவர்க்கும் பொருந்தும். மாந்தர் இனத்தில் பிறப்பால் உயர்வு தாழ்வு கூறும் நூல்களை மறுத்து, 'எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்கும் என்று திறம்பட உரைத்தார் திருவள்ளுவர். இதுவே தமிழ்நாட்டு ஆன்றோர் கருத்தென்பது 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற திருமூலர் வாக்காலும் தெளிவாக விளங்கும். இவ்வாறு தொன்றுதொட்டு வரும் கொள்கையை ஆதரித்து, "எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம்" என்று பாடினார் பாரதியார்.

பாரத நாடு பாரெங்கும் புகழ்பெற வேண்டுமானால் உண்மையான வகுப்புகள் ஏற்படவேண்டும்; பொய் வகுப்புகளும் போலிப் பெருமைகளும் நசிக்க வேண்டும் என்றார் பாரதியார். இளம் பிள்ளைகளின் உள்ளத்தில் இவ்வுண்மை நிலைபெறும் வண்ணம்,

*"சாதிகள் இல்லையடி பாப்பா !—குலத்*
*தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"*

என்ற சின்னஞ்சிறு பெண்ணுக்கு அறிவுறுத்தினார் சாதி என்பது பொய் ; அதனடியாகப் பிறந்த வகுப்புகள் எல்லாம் போலி. ஆதலால்,

*"நிகர் என்று கொட்டு முரசே—இந்த*
*நீணிலம் வாழ்பவர் எல்லாம்,*
*தகர் என்று கொட்டு முரசே—பொய்மைச்*
*சாதி வகுப்பினை எல்லாம்"*

என்ற முரசுப் பாட்டு எழுந்தது.

தமிழகத்திலே தனிப்பெருமை வாய்ந்த ஒளவையார் 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்ருள். அந்த வாக்கை அமுதமாகப் போற்றி,

*"சாதி இரண்டொழிய வேறில்லை என்றே*
*தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்தம் என்போம்"*

என்று பாடினர் பாரதியார்.

## நீதி வேற்றுமை

சாதிப் பிரிவுகளின் அடியாக எழுந்தன நீதிப் பிரிவுகள். ஒருவன் செய்த குற்றத்தை நோக்கி முறை செய்யாது, சாதியைக் கருதித் தண்டனை விதித்தல் வேண்டும் என்று அறிவுறுத்தும் நீதி நூல்களும் உண்டு. இத்தகைய நீதி வேற்றுமை திருவள்ளுவர் கொள்கைக்கு முற்றும் மாறுபட்டதாகும். ஒரு குலத்திற்கு ஒரு நீதி கூறும் நூலன்று திருக்குறள். சமன் செய்து சீர்தூக்கும் கோல்போன்றது அரச நீதி. முறைசெய்யும் அரசன், குற்றத்தைக் கருத வேண்டுமே யன்றிக் குலத்தைக் கருதலாகாது என்பது வள்ளுவர் வகுத்த நெறி. இந் நெறியைக் கடைப்பிடித்துத் தன் மகனை முறை செய்தான் ஒரு தமிழ் வேந்தன். தன் கையை அறுத்தான் மற்ருெரு தமிழ் மன்னன். இவரை வாயாரப் புகழ்ந்தது வையகம். இதற்கு மாருக,

*"சாதிப் பிரிவுகள் சொல்லி—அதில்*
*தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்*
*நீதிப் பிரிவுகள் செய்தார்—அங்கு*
*நித்தமும் சண்டைகள் செய்வார்"*

என்று பாடினர் பாரதியார். சாதிப் பிரிவும், நீதிப்

பிரிவும் நாட்டுக்குக் கேடு விளைப்பன என்பது பாரதியார் கருத்து.

## பெண்ணடிமை

பெண் குலத்தின் உரிமைகளைப் பேணிப் பாதுகாத்த ஆன்றோர்களில் தலை சிறந்தவர் திருவள்ளுவர். இல் வாழ்க்கையில் ஆணுக்குத் துணை புரிபவள் பெண். ஆதலால், மனையாளை 'வாழ்க்கைத் துணை' என்று திருக்குறள் குறிக்கின்றது. ஆயினும், "குலமாதர்க்கு இன்றியமையாத கற்பினைப் பாதுகாக்கக் கருதிய ஆடவர் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினர்.

கட்டும் காவலும் மகளிர் கற்பினைக் காக்கும் என்ற கொளகையை மறுத்தார் திருவள்ளுவர்.

> "சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும், மகளிர்
> நிறைகாக்கும் காப்பே தலை"

என்பது அவர் வாக்கு. கற்பின் பெயரால் மகளிரைச் சிறைகாக்கும் கொடுமை இனி வருங்காலத்தில் நில்லாது; அது தகர்ந் தொழிவதற்கு நெடுங்காலம் செல்லாது என்று கும்மியடிக்கின்றார் பாரதியார்.

> "ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று
> எண்ணி இருந்தவர் மாய்ந்துவிட்டார்
> வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற
> விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

வீட்டு வேலை செய்யும் மாதர்க்கு ஏட்டுக் கல்வி எதற்கு என்று கேட்டார் சிலர். பேதைமை என்பது மாதர்க் கணிகலம் என்று பிதற்றினர் சிலர். வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டிவைப்போம் என்று பேசினர் சிலர். இவ்வாறு பெண் குலத்தை அடிமைப்படுத்திய ஆடவர் இப்போது வாயடங்கினர்; நாணித் தலை கவிழ்ந்தனர்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லைகாண் என்று கும்மியடி"

என்று புதுமைப் பெண் கும்மியடிக்கின்ருள். 'ஆண்களைப் போலவே நாங்களும் கல்வி கற்போம், பட்டங்கள் பெறுவோம், சபைகளில் அமர்வோம், சட்டங்கள் செய்வோம்' என்று பேசுகின்ருள் புதுமைப் பெண்.

கண்ணிரண்டும் ஒன்றையே காணுதல் போல், இல்வாழ்க்கையில் ஈடுபட்ட ஆணும் பெண்ணும் ஒருமையுற்று அறம் புரிதல் வேண்டும் என்று பணித்தனர் ஆன்ருேர். அவ்வாறு இல்லறம் புரிவதற்கு ஆண்களும் பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்தல் வேண்டு மன்ருே? இக் கருத்தை உட்கொண்டு,

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வையம் வாழ்வு தன்னில் எந்த
வகையிலும் நமக்குளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரி நிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே"

என்ற பாரதியாரின் வீரப்பாட்டு எழுந்தது.

இத் தகைய சரிசம வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் கற்புடையராய் இருத்தல் வேண்டும். கற்பென்பது பெண்டிர்க்கே உரியதெனப் பேசினர் முற்காலக் கவிஞர். அது முறையன்று;

"கற்பு நிலை என்று சொல்லவந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

என்று நாடு முழுவதும் குலுங்கக் கும்மியடிக்கின்றனர் புதுமைப் பெண்கள்.

## கற்கத் தகுந்த நூல்கள்

ஆண் பெண் ஆகிய இருபாலர்க்கும் கல்வியறிவு இன்றியமையாதது என்று நல்லறிஞர் எல்லோரும் கூறுவர். கல்வி கற்கும் முறையையும் அதனால் அடையற்பாலதாகிய பயனையும் திட்டமாகக் கூறிப் போந்தார் திருவள்ளுவர்.

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*

என்பது அவர் கட்டுரை. "கல்வி கரையில, கற்பவர் நாள் சில" என்பது உண்மையாதலின் கண்ட நூல்களைக் கற்றுக் காலத்தைக் கழித்தலாகாது. கற்கத் தகுந்த நூல்களைத் தெரிந்து கற்றல் வேண்டும். அவ்வாறு கற்கும் நூல்களைக் கசடறக் கற்றல் வேண்டும் என்ற கருத்துக்களைச் செறிவாகக் கூறினார் திருவள்ளுவர். இக் குறளை ஓதும்பொழுது, 'கற்கத் தகுந்த நூல்கள் எவை?' என்ற கேள்வி முன்னே எழுகின்றது. அந் நூல்களைக் கசடறக் கற்கும் முறை யாது என்ற கேள்வி பின்னே எழுகின்றது; அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கையும் உணர்த்தும் நூல்களே கற்கத் தகுந்த நூல்கள் என்பர். அத் தகைய நூல்கள்தாம் எவை என்று ஆராயப் புகுந்தால் பல்வேறு கருத்துக்கள் காணப்படும். பாரதியார் குறிப்பிடும் நூல்கள் மூன்று. தென்னாட்டில் எழுந்த அந் நூல்கள் எந் நாட்டாரும் போற்றும் தகையன என்பது அவர் கருத்து.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை"

என்று கவிஞர் தெள்ளத் தெளிய உணர்த்திப் போந்தார். கம்பரும் வள்ளுவரும், இளங்கோவும் 'புவியினுக்கு அணியாய்த்' திகழும் புலவர்கள். அன்னார் பெருமையைத் தமிழகம் அறிந்து போற்றவில்லையே என்று வருந்துகின்றார் கவிஞர். சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும், தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும், கம்பன் என்றொரு கவிஞன் வாழ்ந்ததும் தமிழ் நாட்டு மாணவர் அறிந்தாரில்லையே என்று கவலையுறுகின்றார். இந்த மூன்று புலவரையும் பெற்றதனால் தமிழ்ச்சாதி அமரத் தன்மை வாய்ந்தது என்று எண்ணி ஏமாப்புற்றார்.[2] இலக்கிய மாணவர் இந் நூல்களைப் போற்றாது புன்கல்வி கற்பது போலவே சரித்திர மாணவரும் சரியாக வரலாறுகளைக் கற்கின்றாரில்லை என்று குறை கூறுகின்றார் கவிஞர். மறப்படையால் அரசாண்ட மன்னர் வரலாற்றைப் படிக்கும் மாணவர் அறப்படையால் ஆட்சிபுரிந்த அசோகன் பெருமையை அறிந்தனரா? தொன்று தொட்டு வாழையடி வாழையென வந்த மன்னர் குலத்திலே தோன்றிய சேர சோழ பாண்டியர்

2. சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும், திருக்குறள் உறுதியும், தெளிவும், பொருளின் ஆழமும் விரிவும் அழகும் கருதியும், 'எல்லை ஒன்றின்மை' எனும் பொருளதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சியைக் கருதியும், முன்பு நான் தமிழச் சாதியை அமரத் தன்மை வாய்ந்தது என்று உறுதிகொண்டிருந்தேன்.' —பாரதி நூல்கள், 1—656.

ஆட்சி செய்த திறனையும் அறம் வளர்த்த முறையையும் தெரிந்தனரா? வீர சிவாஜியின் வெற்றிச் சிறப்பினை உணர்ந்தனரா? என்று கேட்கின்றார் கவிஞர்.

## பேடிக் கல்வி

இனி, திருவள்ளுவர் பணித்தவாறு கசடறக் கற்கும் முறையும் இக்காலத்திற் காணப்படவில்லை என்று பாடினார்.

"கணிதம் பன்னிரண்டாண்டு பயில்வர் பின்
　　கார் கொள்வானில் ஓர்மீன் நிலை தேர்ந்திலார்
அணிசெய் காவியம் ஆயிரம் கற்பினும்
　　ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்
வணிகமும் பொருள் நூலும் பிதற்றுவார்
　　வாழும் நாட்டில் பொருள்கெடல் கேட்டிலார்
துணியும் ஆயிரம் சாத்திர நாமங்கள்
　　சொல்லுவார் எட்டுணைப் பயன் கண்டிலார்"

என்று கல்வி முறையில் அமைந்த குறைகளை எடுத்துரைத்தார். கல்லூரி மாணவர் பல்லாண்டு கணித நூலும் வான நூலும் பயில்வார்; விண்மீன்களின் நிலையை அறியார். காவியம் பல கற்பார்; கவியின் உள்ளத்தைக் காணார். வணிகநூலும் பொருள் நூலும் பேசுவார்; பாரத நாட்டுப் பொருளாதார நிலை பழுதுறும் பான்மையை உணரார்; இன்னும் எத்தனையோ கலைகளின் பெயரைப் பன்னுவார். இன்னார் கற்கும் கல்வி ஏட்டுக் கல்வியேயன்றி நாட்டுக்குப் பயன்படும் கல்வியன்று. ஆரவாரக் கல்வியேயன்றி அறிவு விளக்கத்திற்கு ஏற்றதன்று என்று பாடினார் பாரதியார்.

இத்தகைய கல்வி பயனற்றது என்பதற்குத் தன்னையே ஒரு சான்றாகக் காட்டுகின்றார் கவிஞர்.

திருநெல்வேலியில் உள்ள இந்து கலாசாலையில் தான் கற்ற கல்வியையும், பெற்ற பயனையும் கரவாது எடுத்துரைக்கின்றார்.

*"செலவு தந்தைக்கு ஓர் ஆயிரம் சென்றது*
*தீதெனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன*
*நலம் ஓர் எட்டுணையும் கண்டிலேன்; இதை*
*நாற்பதாயிரம் கோயிலிற் சொல்லுவேன்"*

என்று இறைவன் மேல் ஆணையிட்டுக் கூறுகின்றார். பட்டங்கள் பெறுவதற்கும், அரசாங்க சேவையில் அமர்வதற்கும் இக் காலக் கல்வி பயன்படுவதல்லால் அறியாமையை அகற்றுவதற்கும், பண்பாட்டை உயர்த்துவதற்கும் பயன்படுமாறில்லை யாதலால் அதனைப் 'பேடிக் கல்வி' என்று பழித்துரைத்தார் பாரதியார். பேடியின் கையிலுள்ள படைக்கலம் பயனற்றதுபோல பள்ளியில் மாணவர் பெறும் கல்வி பயனற்றது என்பது அவர் கருத்து.

## அறத்தின் சீர்மை

'சுய சரிதை'யில் இவ்வாறு கல்வியைப் பற்றிப் பாடிய பாரதியார் திருவள்ளுவர் கருத்தைத் தழுவி அறத்தின் திறத்தையும் பொருளின் பெருமையையும் எடுத்தோதினர். "அறத்தால் வருவதே இன்பம்" என்று வடித்துரைத்த திருக்குறளின் உண்மையை அனுபவ வாயிலாக அறிந்த கவிஞர்,

*"அறம் ஒன்றே மெய்யின்பம் என்ற நல்*
*அறிஞர் தம்மை அனுதினம் போற்றுவேன்;*
*பிற விரும்பி உலகினில் யான்பட்ட*
*பீழை எத்தனை கோடி! நினைக்கவும்*

*திறன் அழிந் தென் மனம் உடைவெய்து மால்*
*தேசத்துள்ள இளைஞர் அறிமினே*
*அறம்ஒன்றே தரும் மெய்யின்பம்; ஆதலால்*
*அறனையே துணை என்று கொண்டுய்திரால்"*

என்று பாடினார். அறத்தால் வருவதே மெய்யின்பம். ஏனையவெல்லாம் போலியின்பம் என்று திறம்படக் கூறிய திருவள்ளுவரை 'நல்லறிஞர்' என்று போற்றிப் புகழ்ந்தார் பாரதியார்.

## பொருளின் பெருமை

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்னும் வள்ளுவர் வாக்கின் உண்மையைத் தம் வாழ்க்கையில் கண்கூடாகக் கண்டவர் பாரதியார்.

*"இல்லானை எல்லாரும் எள்ளுவர், செல்வரை*
*எல்லாரும் செய்வர் சிறப்பு"*

என்றார் வள்ளுவர். இல்லானை இல்லாளும் வேண்டாள்; ஈன்றெடுத்த தாய் வேண்டாள்; செல்லாது அவன் வாயிற் சொல் என்று, இக் குறளின் கருத்தை விரித் துரைத்தார் ஒரு புலவர். அவர் விரிவுரையையும் தழுவிப் பொருளற்றார் அடையும் சிறுமையைப் பாடினார் பாரதியார்.

*"பொருளிலார்க்கிலை இவ்வுலகு என்ற நம்*
*புலவர் தம்மொழி பொய்மொழி யன்றுகாண்*
*பொருளிலார்க்கு இனமில்லை; துணையில்லை;*
*பொழுதெல்லாம் இடர்வெள்ளம் வந்தெற்றுமால்'*

என்று வறுமையால் வரும் சிறுமையை எடுத்துரைத்து, "பொருளிலார் பொருள் செய்தல் முதற்கடன்" என்று அறிவுறுத்தினார் கவிஞர்.

## ஆறுவது சினம்

இவ்வாறு அறத்தின் திறத்தையும் பொருளின் சிறப்பையும் பாடிய பாரதியார் மக்கட் பண்பு வளர் தற்குரிய முறையினையும் வகுத்துரைத்தார். பொறுத்தார் பூமியாள்வார்; பொங்கினார் காடாள்வார் என்பது பழமொழி. *சீலத்தை அழிக்கும் திறம் வாய்ந்தது சினம்.*

*"சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்*
*ஏமப் புணையைச் சுடும்"*

என்றார் வள்ளுவர். நெருப்பின் தன்மையுடையது சினம் எனபது இக் குறளின் கருத்து. சினம் என்னும் நெருப்பு உள்ளத்தில் மூளுமானால் கேடு விளையும். இதனாலேயே "உள்ளங் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம் காத்துக் கொள்ளுங் குணமே குணமென்க" என்று பாடினார் ஒரு கவிஞர். இங்ஙனம் திருவள்ளுவர் முதலிய சான்றோர்கள் உணர்த்திய உண்மையை விஞ்ஞானக் கலையின் வாயிலாக விளக்கலுற்றார் பாரதியார். ஜகதீஸ் சந்திரபோஸ் என்பவர் பாரத நாட்டு விஞ்ஞான வித்தகருள் தலை சிறந்தவர். அவர் ஆராய்ந்து கண்ட உண்மை திருவள்ளுவர் வாய் மொழியை வலியுறுத்துகின்றது.

*"கோணுகிச் சாத்திரத்தை யாளும் மாண்பார்*
*ஜகதீச சந்திர வசு கூறுகின்றான்*
*(ஞானனுபவத்தில் இது முடிவாம் கண்டீர்)*
*நாடியிலே அதிர்ச்சியினால் மரணம் என்றான்*
*கோபத்தால் நாடியிலே அதிர்ச்சி உண்டாம்"*

என்ற பாட்டிலே கோபத்தால் விளையும் கேடு விஞ்ஞான முறையில் உணர்த்தப்படுகின்றது. கோபமுற்றால் நாடியிலே அதிர்ச்சி உண்டாகும். அந்த அதிர்ச்சியினால்

மரணம் நேரும் என்று ஜகதீசர் ஆராய்ந்து கூறும் உண்மையும், மெய்ஞ்ஞானியராகிய திருவள்ளுவர் முதலி யோர் கண்டுணர்த்திய உண்மையும் ஒத்திருத்தலைக் காட்டுகின்றார் கவிஞர். இத் தகைய கேடு வந்தணுகாது காத்துக் கொள்ளுதல் அறிவுடைய மாந்தர் செயலாகும்.

*"தன்னைத்தான் காக்கின் சினம்காக்க, காவாக்கால்*
*தன்னையே கொல்லும் சினம்"*

என்றார் வள்ளுவர். இக் கருத்தை மனத்திற் கொண்டு

*"சினங்கொள்ளார் தம்மைத் தாமே தீயால் சுட்டுச்*
*செத்திடுவார் ஒப்பாவார்"*

என்று பாடினார் பாரதியார்.

கற்றறிந்து அடங்கிய சான்றோருக்கும் சில வேளை களில் சீற்றம் பிறக்கும். அதனைச் 'சான்றோர் சினம்' என்று கவிகள் கூறுவர். சீலமே உருவாகிய திரு வள்ளுவர் சினந்து சாபமிடும் இடமொன்று திருக் குறளில் உண்டு.

*"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக உலகியற்றி யான்"*

என்பது அவர் இட்ட சாபம். கரவாது உவந்து ஈயும் கண்ணன்னார் கண்ணும் இரவாது வாழ்வதே வாழ்க்கை. இத் தகைய மான வாழ்க்கை முட்டுப்பட்டுப் பல்லெல் லாம் தெரியக் காட்டிப் பரிவுடன் இரு கை நீட்டிப் பிச்சையெடுத்துத்தான் ஆகவேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் இச் சீரழிந்த உலகத்தைப் படைத்தவன் சிதைந்து ஒழிக என்று சீறினார் வள்ளுவர். இக்கருத்தை ஆதரித்து,

"இனி ஒரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
சகத்தினை அழித்திடுவோம்"

என்றார் பாரதியார். பழங்காலக் கவிஞராகிய வள்ளுவரும் புதுமைக் கவிஞராகிய பாரதியாரும் கருத்திலும் சினத்திலும் ஒன்றுபட்டவராய் விளங்குகின்றனர். பசியால் நலிந்து பாழடைந்த உலகத்தின்மேற் பாய்ந்தது பாரதியார் சினம். அத் தகைய உலகத்தைப் படைத்தவன்மேற் பாய்ந்தது வள்ளுவர் சினம்.

## போலித் துறவறம்

இவ்வுலகில் அறம் வளரவேண்டும் என்று ஆசைப் பட்ட வள்ளுவர் இல்லறம் துறவறம் என்னும் இரு வகை அறங்களின் பெருமையையும் எடுத்துரைத்தார். இவற்றுள் எதனை மேற்கொண்டாலும் அதற்குரிய நெறியில் ஒழுகுதல் வேண்டும் என்று அறிவுறுத்தினர். துறவற நெறியைக் கூறும்பொழுது போலித் துறவைக் கடிந்துரைத்தார்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்"

என்று பாடினர். துறவு என்பது ஒழுக்கத்தைப் பொருத்ததே யன்றி வேடத்தைப் பொருத்ததன்று. துறவுள்ளம் படைத்தோர்க்குத் தலையை மழித்தலும் சடையை வளர்த்தலும் மிகையாகும் என்பது இக் குறளின் கருத்து. இக் கருத்தை மனமாரப் போற்று கின்றார் பாரதியார். காவித் துணியும் கற்றைச் சடையும் உடையராய் நாட்டை வஞ்சித்து வாழும் போலித் துறவை அவர் வெறுக்கின்றார்.

*"காவித் துணி வேண்டா; கற்றைச் சடை வேண்டா;*
*பாவித்தல் போதும் பரமனிலை எய்துதற்கே"*

என்று பாடினார். அகப்பற்று புறப்பற்று என்னும் இரு வகைப் பற்றையும் அறுத்து இறைவனின் திருவடியைப் பற்றி நின்ற பெரியார் ஒருவர்,

*"மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்*
*பாதமே மனம் பாவித்தேன்"*

என்று கூறியவாறு, பாவித்தல் ஒன்றே போதும் என்றார் பாரதியார்.

## கற்றதனால் ஆய பயன்

இறைவன் திருவடியைப் பற்றினாலன்றிப் பேரின்ப நிலையைப் பெறுதல் இயலாது என்று திருக்குறள் கூறுகின்றது.

*"கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழாஅ ரெனின்"*

என்று பாடினார் வள்ளுவர்.

கட்டறுத்து வீடு பெறுதலே கல்வியின் குறிக் கோளாகும்.[3] இறைவனின் திருவடியைத் தொழுத லன்றி இக் கட்டு ஒழியாது. ஆதலால், வழிபாடு செய்யாதவர் கற்ற கல்வி யெல்லாம் பயனற்றது என்பது திருவள்ளுவர் கொள்கை. இதனை ஆதரித்து எழுந்தது முத்துமாரிப் பாட்டு.

3. *எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தால்*
*மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்*
*திறத்தின்*
*முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருள் உணர்ந்து*
*கட்டறுத்த வீடு பெறும்."*

"உலகத்து நாயகியே—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ !
உன்பாதம் சரண் புகுந்தோம்—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ !
பல கற்றும் பலகேட்டும்—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ !
பயன் ஒன்றும் இல்லையடி—எங்கள் முத்து
மாரியம்மா ! எங்கள் முத்து மாரீ !

என்ற பாரதியார் கவிதையிலே திருக்குறளின் தெய்வ மணம் கமழ்கின்றது.

...RAJ UNIVERSITY LIBRARY. ★ MADURAI-625021. ★